www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.08 திருவள்ளுவர் ஆண்டு 2054

14.04.2023 - 13.05.2023

ISSN : 2195-6480



## மீண்டுமா இந்தியா?

## தாங்குமா தமிழர் நெஞ்சம்?

FREE Magazine

## ரணிலும் ஒரு கொடாக் கண்டன்தான்

## அறத்தை மறந்த தமிழர்கள்

அகரம் 12 ஆண்டு

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


ADS BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
உங்கள் இல்லங்களுக்குத்
தேவையான அனைத்து
அத்தியாவசியப் பொருட்களும்
இப்போது ஒரே இடத்தில்
உங்கள் வீட்டில் இருந்தே
பாதுகாப்பான முறையில்
மளிகைப் பொருட்களை பெற
எமது Whatsapp
0176 45956273
இலக்கத்திற்கு
தொடர்பு ஏற்படுத்துங்கள்
Safe Fast Reliable
ADS BEST FOODS
ADS BEST FOODS
Rheinische str 79-81
44137 Dortmund
Tel : 0231 95046883
Whatsup : 017645956273





ortel MOBILE




## OHNE PAUSE NACH HAUSE.

ortel MOBILE O2 e-plus




20 GB

## + Phone calls to 70 destinations

Make calls abroad :
To all EU countries and 38 other international destinations

Surf & call in the EU

On-Net Flat : Make unlimited calls to the Telefónica Germany network

Individually upgradeable through the additional More Internet & More Minutes options

Now for 4weeks for "

**22,49€***

+5 GB

## 11 GB Internet Flat L

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 31.05.23)*

For tablets & surf sticks

Internet telephony (VoIP) equipped

Internet flat rate applies to all EU countries

Now for 4weeks for "

**19,99€***

## Ortel. Wir sprechen Deine Sprache.

ANDROID APP ON Google play

Available on the App Store

Aufladbar mit:





AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine
14 பங்குனி 2023 - 13 சித்திரை 2023
சுவடி / ISSUE 10.08

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம். எல்லாரும் எல்லாமும் நலமாக பெற்று, நலமுடனும், வளமுடனும் வாழ வாழ்த்துகிறது.**

**எம் தாயக மண் மீட்புக்கும், மக்களின் மறுவாழ்வுக்கு மட்டுமே பயன்படும் வகையில் எம்மைக் கட்டமைத்துக் கொள்ள உறுதி எடுப்போம்**

ஈழத் தமிழ் மக்களைப் போர்ச் சூழலில் இருந்து காப்பாற்றவே ஒஸ்லோ நாட்டிலிருந்து எரிக் சோல்கைம் தேவ தூதனாக வந்தார் என, எல்லாரும் எம்மை நம்ப வைத்தார்கள். நாங்களும் அப்படித்தான் நம்பினோம். சில தற்குறி அரசியல் ஆய்வாளர்களும், அடிமைத் தரகு அரசியல் தலைவர்களும் இன்னமும் அப்படித்தான் நம்பியும், பேசியும் வருகிறார்கள். இப்படியான அறிவு சீவிகளால் நம் தமிழினம் அழிந்தது. எதிரிகள் எம்மை அழிக்க அவர்களும் காரணமாகினார்கள்.

2009இல் போர் நிறுத்தப்பட்டதாக அரசுகள் அறிவித்த பின்னரும், தமிழ் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகளும், ஆக்கிரமிப்புகளும் இன்றும் குறைவின்றித் தொடர்கின்றன. போரின் பொழுது காணாமல் போன மச்சான் சோல்கைம், அண்மையில் மீண்டும் இலங்கை வந்து, ரணிலின் சுற்றுச் சூழல் ஆலோசகராக நியமிக்கப்பட்டதாக சில செய்திகள் கூறின.

இடையில் நேரம், வாய்ப்புகள் கிடைத்த போதெல்லாம் அவர் புலிகள் இயக்கத்தையும், மேதகு தலைவர் பிரபாகரனையும் கழுவி ஊற்றத் தவறவில்லை. அவர் எடுத்த பணிகளைப் புலிகளைப் பழி வாங்கவும், தன்னைப் பயன்படுத்திய இலங்கை, இந்திய, அமெரிக்க, பிரித்தானிய அரசுகளையும் யப்பான், உக்கிரெயின், பாகிஸ்தான் போன்ற 3ஆம் 4ஆம்தர அவற்றின் நட்பு நாடுகளையும் திருப்திப் படுத்தியும் பெற்ற பொய்யான வெற்றிக் களிப்பில் அவர் மிதப்பது கண்கூடாக காணமுடிகிறது.

அவரது தோல்விகளை அவரால் வெளியே சொல்ல முடியாது. அவரது நாட்டின் நிலவாயு ஆராய்ச்சி நிறுவனம், வருடக் கணக்கில் ஆய்வுகளை நடத்தி, மன்னார் வளைகுடா, புத்தளம் கடல் அடிப் பகுதிகளில் பெற்றோலிய வளம் தமிழ்நாடு அடங்களாக இருப்பதைக் கண்டறிந்து, அந்தப் பெரும் பொக்கிஷத்தைப் பெற்று

விடும் நோக்கில், புலிகளை அழிக்காமல் எதுவும் பலிக்காது என அறிந்து இலங்கை, இந்திய அரசுகளின் இடைத்தரகராகப் புலிகளிடம் அமைதித் தூதனாக வந்தார்.

ஆனால், அந்தப் பெரிய பொக்கிஷத்துடன் இந்தியக் கடலும், நிலமும் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்தியாவும், அதன் எண்ணெய் நிறுவனமான அகர்வாலின் கம்பனியும் வெளிநாடு எதுவும் உள்ளே வரவிடத் தயாராக இல்லை. எனவே, இங்கிலாந்தில் உள்ள அகர்வாலின் நிறுவனமான கெயின் எண்ணெய் வயலை ஏலத்தில் வாங்கி விட்டது.

அமைதித் தூதனாக வந்த எரிக், இராமாயணத்தில் இலங்கையை எரித்த அனுமனாக மாறி, எரித்துவிடத் தேவையான அனைத்து வேலைகளையும் ராம தூதனாக செயற்பட்டார். இன்று அவரது முதலாளிகள் புது டில்லியும், கொழும்பும் உள்ளன. இனியாவது நாம் தனி ஒரு நாட்டையோ, மனிதரையோ நம்பி அரசியல் செய்து நிலையான அமைதியைக் காணலாம் என்கிற நினைப்பை, எமக்குப் புலிகளின் எழுச்சியும், அழிவும் கற்றுத் தந்த அரிய படிப்பினையாக எடுத்து, எமது வருங்கால அரசியலைத் திட்டமிட வேண்டும் என்பதே அகரம் வலியுறுத்தும் விடயம்.

இனி வருங் காலத்தில் இலங்கை, இந்திய அரசுகளின் தயவு தாட்சண்யம், உதவி, ஒட்டு உறவு என எதையும் வைத்துக் கொள்வதால், எந்தப் பயனும் இல்லை. அப்படித்தான் தமிழர்களின் பணபலமும், சர்வதேச செல்வாக்கும் இவர்களுக்கு எந்த வகையிலும் கட்டுப்படாமலும், எம் தாயக மண் மீட்புக்கும், மக்களின் மறு வாழ்வுக்கு மட்டுமே பயன்படும் வகையில் எம்மைக் கட்டமைத்துக் கொள்ள உறுதி எடுப்போம்.

அமெரிக்கா அதிகாரப் பூர்வமாக உள்ளே புகுந்து, திருகோணமலை கடலை தனதாக்கி விட்டது. அடுத்து என்ன? என்கிற கேள்வி எல்லோருக்குள்ளும் எழுந்து விட்டது. எத்தனையோ அந்நியர் எம்மை ஆண்டு விட்டுப் போயும் விட்டார்கள். விட்டு வாங்கும் வித்து வாங்கும் சிங்களம் திருந்தப் போவதில்லை.

ஔவையாரின் இந்தப் பாடலை சிங்களம் நினைக்க வைத்து விட்டது. 'ஆன முதலில் அதிகம் செலவானால், மானம் அழிந்து மதி கெட்டுப் போவான். தானும் அழிவான், செல்லாது அவன் வாயில் சொல்'.

பத்தோடு ஒன்றாக இதுவும் ஒன்று. அடுத்த மகாபாரதப் போர் இந்தியாவின் குருசேத்திரம் அல்ல. அது இலங்கை இராவணேஸ்வர பூமியான இலங்கை. இனி ஒரு கண்ணன் வரவோ, கீதை உபதேசிக்கவோ யாரும் வரமாட்டார்கள்.

அடுத்தப் போரை நடத்தவும், பார்க்கவும் இருப்பவர் பார்க்கட்டும். மேதகு தலைவன் வந்தாலும் வரலாம், எல்லாருக்கும் பாடம் நடத்தினாலும் நடத்தலாம். நல்லவை நடக்க எண்ணி விடைபெறும்.

**ஆசிரியர், அகரம் குழுமம்**






த. எதிர்மன்னசிங்கம்







## இவர்கள் எமக்கு வழங்கிய நீதி
## எந்த நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு?

# மீண்டுமா இந்தியா? தாங்குமா தமிழர் நெஞ்சம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஈழத் தமிழ் இனத்துக்குத் துரோகத்தைச் செய்யும் பணியில் ஆரிய சிங்கள பௌத்த இலங்கை அரசையும், ஆரிய இந்திய அரசையும், ஈழத் தமிழருக்கு எதிராகத் தூக்கி நிறுத்தும் பணியில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள பகிரங்கக் கோரிக்கைக் காட்டுகிறது. சம்பந்தன் கூட்டத்தைத் தமிழ் மக்கள் தேர்தல்களில் தூக்கி எறிந்துவிட்ட நிலையில், அவர்களை மீண்டும் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் தலைமை ஏற்கச் செய்ததால், அவர்கள் பாராளுமன்றம் போக முடிந்தது.

புலிகள் இயக்கம் சிங்கள இராணுவத்துடன் இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாகப் போராடி, பல நூறு மாவீரர்களின் உயிர்க் கொடையால் மீட்டு உருவாக்கிய தமிழர் தாயகத்தைத் தமிழர் தேசமாக உலக அங்கீகாரம் பெறவேண்டும் என்பதற்காக, பாராளு மன்றத்தில் உரிமைக் குரலை எழுப்ப வேண்டி, அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பான தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் தமிழ் மக்கள் முன் நிறுத்தப்பட்டார்.

அதுவரை அரசியல் வனாந்தரத்தில் இந்தியாவில் வாழ்ந்த கூட்டம், புலிகளின் தயவால் தமிழ் மக்கள் வாக்களித்து, தமிழ் மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்றவர்கள்தான் இந்தக் கூட்டமைப்பு. புலிகளின் போராட்டத்தைப் பாராளுமன்றத்தில் ஒலிக்க வைக்க அனுப்பப்பட்டதை மறந்து சிங்கள ஆட்சியாளருக்கும், இந்திய அரசுக்குமான தேவைகளை நிறைவேற்றுவதைத் தமது பணியாகக் கொண்டு செயற்பட்டனர்.

இதனால் அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பிக்கத் தருணம் பார்த்து, தமிழ் ஈழக் குரலை எழுப்பாமல் பதவி, சுகங்களை அனுபவிப்பதிலும், தப்பித்து ஓடி ஒளிவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்திருந்தனர். உண்மையான தமிழ்த் தேசிய அரசியல்வாதி யோசப் பரராஜசிங்கம்,குமார் பொன்னம்பலம் போன்றவர்களும் ஊடகவாளர்களும், சிங்கள ஆட்சியாளரின் கூலிப் படைகளால் கொல்லப்பட்டு, போர் மிக உக்கிரமான நிலையை அடைந்த பொழுது, சம்பந்தன் கூட்டம் புலிகளின் தொலைபேசித்

தொடர்புகளை எடுக்காமலும், முழுமையாகத் துண்டித்து விட்டு, இந்தியாவில் ஓடி ஒளிந்து காங்கிரஸ் கட்சியின் ப.சிதம்பரம், நாச்சியப்பன்

ஆகியோரின் சொற்படி, தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ மக்களையும் இலங்கை, இந்திய அரசுகள் கொத்துக் குண்டுகள் போட்டு, முற்றாக கொன்று குவிக்கும் செய்திகளைச் செவியாரக் கேட்டு, 2010 தேர்தல் வரை மகிழ்ந்திருந்து நாடு திரும்பினர்.

“இந்தப் போர் இந்தியாவுக்காகத் தான். இந்தியாவின் உதவி இல்லாமல் புலிகளை அழித்திருக்க எம்மால் முடியாது” என மகிந்த ராஜபக்ஷ உட்பட எல்லா சிங்களத் தலைவர்களும் சொல்லி வருகிறார்கள். ஆனால், இந்தியாவின் கபடத்தையும், சூழ்ச்சியையும் நமது தலைவர்கள் யாரும் பேசாமல் மௌனமாக இருப்பதோடு, இந்தியாவின் 13ஆவது திருத்தச் சட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் முற்றாக நீதிமன்றத் தீர்ப்பு மூலம் சாகடித்தும், மீள அமுலாக்க பிக்குகள் எதிர்த்து வரும் நிலையில், சம்பந்தன் தமிழ் மக்களின் தீர்வாக வேண்டும் எனக் கேட்பது முட்டாள்தனத்தின் உச்சம் என்பதை விட, இதை எப்படிச் சொல்ல முடியும்?

பின் வரும் பகுதி தெற்கு ஆசிய இணைய இதழ் மே.2020 ஈழத் தமிழ் இனப் படுகொலையாளி சோனியா காந்தி.

சோனியா காந்திதான் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை வற்புறுத்தி, புலிகள் இயக்கத்தைத் தோற்கடிப்பதும், பிரபாகரனைக் கொல்வதும்தான் இந்தியாவின் நலன்களை விடவும் சீனா, பாகிஸ்தான், இலங்கையில் கால் ஊன்றுவதை விடவும் மிக முக்கியமானது என மூர்க்கமாகச் செயற்பட்டார்.

போர் நிறுத்தத்தின் பொழுது இராணுவத் தீர்வு ஒன்றுதான் ஒரே தீர்வு என்பதில் மூர்க்கமாகச் செயற்பட்டார். அமைதி பேணுவது என்னும் நோக்கம், அந்தக் கட்டத்திலிருந்து மிகத் தொலைவுக்குச் சென்று விட்டதை அவரது இலங்கை அரசுக்கு அயராது வழங்கிய ஆலோசனைகளும், இராணுவ உதவிகள், சமூக அமைப்புகளைக் கட்டுப்படுத்துதல் ,ஊடக கட்டுப்பாடுகள், மற்றும் முழுமையான தாக்குதலுக்கு இந்திய காங்கிரஸின் பாராமுகம் என்பவற்றில் தீவிரமாகச் செயற்பட்டார். அவரது ரணில் மீதான செல்வாக்கால் கருணாவை இயக்கத்திலிருந்து பிரிக்கவும், கருணா கே.பி.யின் காட்டிக் கொடுப்புகளும் முக்கியமானவை.

***It was Sonia Gandhi who decided and convinced Indian PM Manmohan Singh(2004-2014) that defeating the LTTE and killing Prabhakaran was more important in safeguarding India’s interests than allowing China and Pakistan to lay their grips on the island. Sonia Gandhi, during the ceasefire, made it adamant that the only solution to the conflict was a military one.***

***The notion to “maintain peace was” far from that of reality as she routinely advised the Sri Lankan government on possible military strategies, civilian population control, media suppression and IC negligence to a full-scale offensive. Her influence, alongside Ranil’s, played a significant role in dividing the LTTE leadership, ex. Karuna and KP’s betrayals.***

இத்தாலிக் காறிக்கும் குடும்பத்துக்கும், ராஜீவ் காந்தியைக் கொன்ற உண்மைக் குற்றவாளிகளைத் தண்டிக்கத் துப்பில்லை, புலிகள் இயக்கத்தையும், பிரபாகரனையும்





,ஈழத் தமிழ் மக்களையும் பூண்டோடு கருவறுக்க நினைத்த தேசியக் கூட்டமைப்பும், தமிழினத் திருட்டு விடுதலை குழுக்களும் முழு ஆதரவளித்ததும் அல்லாமல், ஒன்றுக்கும் உதவாத அரசியல் தீர்வை மீண்டும் இந்தியாவிடம் பிச்சையாய்க் கேட்கும் பிச்சைக்கார தலைவர்களை, ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்டாமல், தமிழ் இனம் உயிர் வாழ முடியாது.

இப்படி மோசமாக ஒரு இனக் கொலையை சோனியா காந்தியும், பிரியங்கா காந்தியும் இப்படுகொலைகளை நேரடியாக நடத்த வேண்டிய தேவையும், அதிகாரமும் எப்படிக் கிடைத்தது ? நாடு திரும்பியதும் முன்னர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளான திருமதி.பத்மினி சிதம்பர நாதன், கஜேந்திரகுமார், பொன்னம்பலம் உட்பட தமிழ் தேசிய அபிமானிகளைக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட அனுமதிக்காமல் செய்தவர்தான் சம்பந்தன். வயதாகியும் பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்ற முடியாத நோயாளி சம்பந்தன், பதவியை விடாமல் வீட்டிலே கிடந்தபடி தமிழரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் விதத்தில் ரணிலுக்கும், இந்திய அரசுக்கும் ஆதரவாக 13தான் வேண்டும் என்கிறார்.

ஈழத் தமிழ் இனத் துரோகி இரா.சம்பந்தன் அவருக்கு 1976 வட்டுக் கோட்டைப் பிரகடனமும், 1977 தமிழர் விடுதலைக் கூட்டணியும், அது பெற்ற மக்களின் ஆணையும், அமிர்தலிங்கம் பெற்ற எதிர்க் கட்சித் தலைமையும் மறந்து விட்ட, முதியோர் இல்லத்தில் இருக்க வேண்டிய செயலற்ற நோயாளிதான் அழிக்கப்படும் நிலையில், அவதிப்படும் ஈழத் தமிழினத்தைக் காப்பாற்றும் வல்லமை பெற்ற தலைவனா? என்பதை எந்த மனநோயாளியும் அனுமதிக்க மாட்டான். ஆனால், மன நோயாளியை விட மோசமான மன நோயாளிகளா ஈழத் தமிழ் மக்கள்?

















CHOLAN

# சோழன் பொருட்களின் விநியோகஸ்தகர்

**DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்**














StaR-Impex




## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

சண் தவராஜா



# அறத்தை மறந்த தமிழர்கள்

அண்மைக் காலமாக தாயகத்தில் இருந்து வெளிவரும் ஒருசில செய்திகள் மனதைக் கவலை கொள்ளச் செய்கின்றன. சில செய்திகள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன.

கொலை, கொள்ளை, பாலியல் சீண்டல்கள், சிறார் துஷ்பிரயோகம், போதைப் பாவனை, தற்கொலைகள், வேலியே பயிரை மேயும் சம்பவங்கள் என ஊடகங்களில் அன்றாடம் வெளிவரும் செய்திகள் சமூக அக்கறை கொண்டோரின் மன அமைதியைக் குலைக்கும் வகையில் அமைந்துள்ளன. எமது கடந்தகாலம் இத்தனை மோசமான சம்பவங்களால் நிரம்பி இருந்திருக்கவில்லை. அது வேறானதாக இருந்தது. 'கடந்தகாலம் ஒரு வசந்தகாலம்' என வர்ணிக்கப்பட்ட நிலை, கடந்து போய்விட்டதாகவே தோன்றுகிறது. முந்திய தலைமுறைக்குக் கிட்டிய அந்த வசந்தகாலம், இன்றைய தலைமுறைக்கும், இனிவரும் தலைமுறைக்கும் கிட்டுமா? என்ற நியாயமான கவலை தோன்றுகிறது.

'பழையனக் கழிதலும், புதியனப் புகுதலும் வாழ்வின் அங்கம்' என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மனிதகுல வரலாறும் காலமாற்றத்துக்கு உட்பட்டே இன்றைய நிலையை எட்டியிருக்கின்றது. காடுகளில் மிருகங்களோடு மிருகங்களாக, காட்டுமிராண்டிகளாக, சக மனிதனையே கொன்றுப் புசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்த மனிதனே இன்று நாகரிக மனிதனாக மாறியிருக்கிறான், உலகையும் நாகரிகம் மிகுந்ததாக மாற்றியிருக்கிறான். வளர்ச்சி, முன்னேற்றம் என்பதன் அர்த்தமே முன்னைய நிலையில் இருந்து மேலும் உன்னதமான ஒரு நிலைக்குச் செல்வதுதான். ஆனால், இன்றைய நடப்புலகை முன்னேறிய நிலையில் உள்ளதாக வகைப்படுத்த முடியுமா?

பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பெருமையாகக் கருதும் ஒரு சமூகத்தில் இதுபோன்ற சீர்கேடுகள் எதனால் நடைபெறுகின்றன? அவ்வாறு நடைபெறுவதற்கான சூழல் எவ்வாறு உருவானது? இவற்றைத் தடுக்கின்ற பொறுப்பு யாரிடம் உள்ளது?

நவீன உலகின் போக்கு ஊடகங்களின் கைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இன்று மலிந்துவிட்ட ஊடகங்கள் கட்டமைக்கும் உலகு என்பது, அனைவருக்கும் உவப்பான ஒன்றாக இல்லை என்பதே யதார்த்தம். அடுத்தவனின் படுக்கை அறை வரை எட்டிப்பார்க்கும் போக்குடன் செயற்படும் அவை, 'அறம்' என்ற மனித வாழ்வியலின் முதன்மையான அம்சத்தைக் கவனத்தில் கொள்வதில்லை. திடமான கொள்கைகள்



எதுவும் இல்லாமல் இருப்பதையே திடமான கொள்கையாகக் கொண்டிருக்கும் ஊடகங்கள் மனித அறிவைத் தம்வசப்படுத்தி, தன்வசம் அறிவு இல்லாத மனிதர்களைப் பிரசவித்துக் கொண்டிருக்கின்றன.

குடும்பமாக, மனிதனாக வாழும், வாழத் துடிக்கும் மனிதர்களைத் தனித்தனித் தீவுகளாக உருவாக்கி, சக மனிதன் பற்றிய அக்கறையோ, கரிசனையோ இல்லாதவர்களாக உருவாக்கி, ஒரு மனநோயாளி நிலைக்கு இட்டுச் செல்லும் ஊடகங்களின் போக்கும், அத்தகைய போக்கை அனுமதிக்கும், கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத அல்லது விரும்பாத அரசியல் தலைமைகளும் உலகில் நிறைந்து காணப்படுகின்றன. அதன் விளைவாக சமூகம் சீர்கேடு நிறைந்ததாக, அச்சம் தருவதாக மாறிக் கொண்டிருக்கின்றது. அறிவியல் பூர்வமான விரைந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால், இந்த நிலை இன்னமும் மோசமாக மாறும் அறிகுறிகளே தென்படுகின்றன.


ஒரு சமூகத்தின் கருத்துநிலை, அதன் போக்கு என்பவற்றைத் தீர்மானிப்பவர்கள் அந்தச் சமூகத்தில் உள்ள மூத்த குடிமக்கள், வழிகாட்டிகள் மற்றும் அறிஞர்கள். ஆனால், அத்தகையவர்களிடம் சமூக அக்கறை குறைவடைந்து செல்வதால் சமூகம் சீரழிவதை அவதானிக்க முடிகின்றது. மறுபுறம், சமூக அக்கறையுடன் கருத்துக் கூறும் பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்பதற்கு இன்றைய சமூகத்தில் யாரும் தயாராக இல்லை என்பதையும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

ஈழத் தமிழ்ச் சமூகத்தின் இன்றைய நிலைக்கு எமது மண்ணில் நடந்த போருக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. முதியவர் சொல் கேட்டு நடந்த எமது சமூகம், ஒரு கட்டத்தில் இளையோர் சொல் கேட்கும் சமூகமாக மாறிப் போனது. அறிவுரைகளால் வழிநடத்தப்பட்ட சமூகம், ஆயுதங்களால் வழிநடத்தப்படும் சூழல் உருவானது. பெரியவர்களின் பிடி நழுவ நழுவ, சிறியவர்களின் பிடி இறுக்கமாகிக் கொண்டு வந்தது.

அமைதிச் சூழல், ஆன்மீகச் சூழல், கலை மற்றும் பண்பாடுகள் மலிந்த சூழல், போர்ச் சூழலால் பிரதியீடு செய்யப்பட்டது, அவலம் நிறைந்ததாக மாறியது. தற்போது போர் முடிவுக்கு வந்து விட்டாலும், அதன் எச்சங்கள் சமூகத்தில் இன்னமும் மிச்சமாக உள்ளன. அன்றைய காலகட்டத்தின் அதிர்வுகளில் இருந்து சமூகம் இன்றுவரை மீளவில்லை. சமூகத்தை வழிநடத்தும்


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்துபயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**

பொறுப்பில் இன்று பெரியவர்களும் இல்லை, இளையோரும் இல்லை. இந்த நிலை கிட்டிய எதிர்காலத்தில் மாறுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

இயற்கையின் படைப்பான மனிதன், இயற்கையை வெற்றி கொள்வதாகத் தவறாக நினைத்துக் கொண்டு, இயற்கையையே அழிக்கும் போக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறான். தன்னையே படைத்த இயற்கையையே சீண்டிப் பார்க்கும், இயற்கையையே பகைத்துக் கொள்ளும் மனிதனின் வெறி, எல்லை கடந்து செல்லும் நிலையில் இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ள மனிதன், பல்லாண்டு காலமாக மனித வாழ்வுக்கு உகந்ததாகக் கட்டியெழுப்பப்பட்ட சமூகக் கட்டமைப்பையும் சிதைக்கும் போக்கில் நடைபோடுவது தற்கொலைக்கு ஒப்பானதே அன்றி வேறில்லை.

'விழித்துக் கொண்டோர் பிழைத்துக் கொள்வார்' என்ற பாடல் வரிகளுக்கு ஒப்ப மனிதன் விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது. மக்கள் ஒவ்வொருவரும் சமூக அக்கறையை வளர்த்துக் கொண்டு, சக மனிதனைச் சகோதரனாகக் கருதி நல்வழிப்படுத்த வேண்டிய வேளை இது. நான், எனக்கு என்ற சுயநலத்தைத் துறந்து நாம், நமக்கு என்ற பொதுநலத்துடன் பயணிக்க வேண்டிய காலம் இது.

பொறுப்புள்ள பிரசைகளின் கடப்பாடு ஒரு சமூகத்தில் எத்துணை முக்கியமோ, அதேபோன்று கல்வியும் முக்கியமானது. துர்வாய்ப்பாக இன்றைய கல்வி முறை அறிவுத் தேடலுக்கான வாய்ப்புகளை வழங்குவதை விடுத்து, பொருள் தேடுவதற்கான வாய்ப்பையே அதிகம் முன்நிறுத்துகிறது. வாழ்க்கை மையக் கல்வியை வேண்டும்.

சமூகத்தில் தொழில் மையக் கல்வி வழங்கப்படுவதன் விளைவு, மனிதனை தன்நலம் சார்ந்தே சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது. கல்வி போதிக்கப் படும் போதே சமூக விழுமியங்களும் போதிக்கப்பட வேண்டும். விழுமியங்களின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். உயரிய விழுமியங்களைக் கடைப்பிடிப்போர் கொண்டாடப்பட வேண்டும். இவை எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்ச் சமூகத்தில் அறிவாளிகளுக்குப் பஞ்சம் இல்லை. துறைசார் அறிவைக் கொண்டுள்ள அவர்கள், சமூகம் சார்ந்து சிந்தித்தால் ஒழிய, செயற்பட்டால் ஒழிய நிலைமையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. தமிழ்ச் சமூகம் தொடர்ந்தும் கடந்தகாலப் பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நடப்புச் சமூகத்தைப் பற்றிய அக்கறை, கரிசனை எதுவும் இல்லாமல் நடைபோடுவது கடந்தகாலப் பெருமையையும் பயனற்றதாகவே ஆக்கும் என்பதை உணர வேண்டும்.

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு (குறள்)




Smt. விதியா மயூரன், சுவிஸ்



## 20. அலபத்ம விநியோகஹ

விகசாப்ஜே கபித்தாதி பலே ஆவர்தகே குசே/ விரஹே முகுரே பூர்ண சந்த்ரே சௌந்தர்ய பாவனே // தம்மில்லே சந்த்ர ஷாலாயாம் க்ராமேச உத்ருத்த கோபயோஹோ/ தடாகே ஷகடே சக்ரவாகே கலகலாரவே // ஸ்லாகனே ஸோ அலபத்மஷ்ய கீர்திதோ பரதாகமே

**கருத்து**

| | |
|---|---|
| விகசாப்ஜே | மலர்ந்த தாமரை |
| கபித்தாதிபலே | விளாம்பழம் |
| ஆவர்தகே | ஒரு வட்டம் |
| குசே | மார்பு |
| விரஹே | விரகம் (பிரிவின் வேதனை) |
| முகுரே | கண்ணாடி |
| பூர்ண சந்த்ரே | பூரண சந்திரன் |
| சௌந்தர்ய பாவனே | அழகு |
| தம்மில்லே | கொண்டை |
| சந்த்ர ஷாலாயாம் | கோபுரம் |
| க்ராமேச | கிராமம் |
| உத்ருத்த கோபயோஹோ | அதிகோபம் |
| தடாகே | தடாகம் |
| ஷகடே | வண்டில் |
| சக்ரவாகே | சக்ரவாகப் பறவை |
| கலகலாரவே | முணுமுணுத்தல் |
| ஸ்லாகனே | புகழ்தல் |

**ஸோ அலபத்மஷ்ய கீர்திதோ பரதாகமே**



அலபத்ம விநியோகஹ



சதுர விநியோகஹ

## 21. சதுர விநியோகஹ

கஸ்தூர்யாம் கிஞ்சிதர்தேச ஸ்வர்ணே தாம்ரேச லோஹேகே / ஆர்த்ரே கேதே ரஸாஸ்வாதே லோசனே வர்ண பேதனே // ப்ரமானே ஸரஸே மந்தகமனே ஷகலீக்ருதே / ஆனனே க்ருத தைலாதௌ யுஜ்யதே சதுரஹ் கரஹ //

**கருத்து**

| | |
|---|---|
| கஸ்தூர்யாம் | கஸ்தூரி |
| கிஞ்சிதர்தேச | சிறிதளவு |
| ஸ்வர்ணே | தங்கம் |
| தாம்ரேச | செப்பு |
| லோஹேகே | இரும்பு |
| ஆர்த்ரே | மனம்கசிதல் |
| கேதே | துக்கம் |
| ரஸாஸ்வாதே | ருசி பார்த்தல் |
| லோசனே | கண்கள் |
| வர்ணபேதனே | ஜாதி பேதங்கள் |
| ப்ரமானே | சத்தியம் |
| ஸரஸே | சரசம் |
| மந்தகமனே | மெல்ல நடத்தல் |
| ஷகலீக்ருதே | சமமாக இரு துண்டுகளாக முறித்தல் |
| ஆனனே | முகம் |
| க்ருத தைலாதௌ | நெய், எண்ணெய் வகைககள் |

**யுஜ்யதே சதுரஹ் கரஹ**

**அவதானி**

இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும், குறிப்பாக ஜேர்மனிக்கும் இடையிலான நட்பு பல நூறாண்டுகள் பழமையானது. இந்தியாவிற்கான சுதந்திரத்தை ஆயுதவழி மூலம் பெற முயற்சித்த சுபாஸ் சந்திபோசுக்கும், அடல்ப் கிட்லருக்கும் இடையில் பெரும் நட்பே இருந்திருக்கிறது.

எப்பொழுதும் இந்தியாவைப் பற்றிய ஜேர்மனியின் பார்வை கனிவு கலந்த நட்பாக இருந்து வருகிறது. ஒரு நாட்டுக்கு தன்னகத்து அரசியல், அயல்நாடுகளுடனான அரசியல், பிற நாடுகளுடனான வெளிநாட்டுக் கொள்கை சார்ந்த அரசியல், அதிலும் ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதாரம், அந்நாடுகளில் புழக்கத்தில் உள்ள பணத்தின் மதிப்பீடு சம்பந்தமான பல தரவுகளின் அடிப்படையிலும், இராணுவக் கட்டமைப்பு, ஒவ்வொரு நாட்டினுடைய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களின் தரம், தனித் தன்மை போன்றவற்றின் மீதான கணிப்பீடுகள் சார்ந்தும், வெளிநாட்டு அரசியல் கணிப்பு கணிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ஜேர்மனியும், பிரான்சும் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட கார்கள் தொடங்கி, போக்குவரத்து வாகனங்கள், கனரக வாகனங்கள், இராணுவ போர்முனை வாகனங்கள், புகையிரதங்கள், விமானங்கள் போன்றவற்றை தயாரிக்கின்ற போதிலும், ஜேர்மனியின் உற்பத்திக்கே உலகளவில் பெரும் வரவேற்பு இருந்து வருகின்றது.

சமகால போராக நடைபெற்றுக் கொண்டிருக்கும் உக்ரைன் ரஸ்யப் போரினை நிறுத்துவதற்கு அல்லது ரஸ்யாவை சமாதான நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஜேர்மனியத் தயாரிப்புப் பீரங்கிகளை உக்ரைனுக்கு வழங்குவதா? இல்லையா? என்பதை ஜேர்மனி அரசு யோசனை வைத்திருக்கும் போதே, ரஸ்யா பதட்டப்படுவதாக செய்திகள் கிடைக்கின்றன.

ஜேர்மனியில் தயாரிக்கப்படும் கார்களுக்கு உலகெங்கும் பெரும் மதிப்பு உண்டு. கார் இயந்திரத்தின் சூட்டினை குறைப்பதற்காகக் கார் இயந்திரத்தினை நீரினால் சூட்டை ஆற்றும் முறையே பொது முறையாக இருந்து வருகிறது.

ஆனால், அடல்ப் கிட்லர் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது போர்முனை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, காற்றினால் இயந்திரத்தின் சூட்டைத் தணிக்கும் இயந்திரத்தை உருவாக்கும்படி கார் உற்பத்தி விஞ்ஞானிகளுக்கு பணிக்கப்பட்டு அவ்வகையான கார்களை உற்பத்தி செய்தார்கள்.

காரின் பின்பகுதியில் அந்த இயத்திரத்தை பொருத்தி, அத்தகைய

# உளவு நிறுவனங்கள்



கார்களுக்கு 'வோக்ஸ் வகன்' எனவும் பெயரிட்டு, அக்கார் உற்பத்தி நிறுவனம் 'வோக்ஸ் வகன்' என்று சுருக்கப் பெயராக அழைக்கப்படுகின்றது. அத்தகைய வல்லமை கொண்ட நாட்டுடன் நட்புப் பாராட்டி, அங்குள்ள தொழில் நுட்பங்களைத் தமது நாட்டுக்கு கொண்டு வரவே அனைத்து நாடுகளும் முயற்சிக்கும்.

இத்தகு முயற்சிகளை பொருளாதார ஒப்பந்தங்கள் மூலமாகவோ, தொழில்துறை ஒப்பந்தங்கள் மூலமாகவோ செய்து கொண்டாலும், தொழில்துறைக்கான விஞ்ஞான மூலத்தை ஜேர்மனி இன்னொரு நாட்டுக்கு எக்காரணம் கொண்டும் கொடுக்காது. ஆனால், அதனை அறிவதே இந்தியாவின் நோக்கமாக இருக்கும். அதனை அறிவதற்கான எல்லாச் சூழலையும் ஜேர்மனிக்குள் இந்தியா ஏற்படுத்தி வருகின்றது.

ஜேர்மனிய மருத்துவமனைகளில் கணிசமான இந்திய மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அது போன்று தொழிற்சாலைகளிலும் ஒரு குறிப்பிட்ட இந்தியப் பொறியியலாளர்களும், தொழிற்சாலை வல்லுனர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். ஜேர்மனிய மருத்துவத்துறை அதி நவீனமானவை, மருந்து உற்பத்தி தொடங்கி, சத்திர சிகிச்சை முறைகள் வரை யாவும் அதி நவீனமானவை. இந்த நவீனத்தை உள்வாங்கி தமது நாட்டுக்கு கொண்டு செல்வதில் இந்திய மருத்துவர்கள், இந்திய உளவு நிறுவனத்தின் ஒற்றர்களாகப் பணிபுரிவதை நிராகரிக்க முடியாது.

ஜேர்மனியின் அனைத்து வளர்ச்சிக்கும், செம்மையாக ஒழுங்கமைக்கப்பட்ட அறிவுசீவித்தனமான கல்வி முறையே காரணமாகும். இக்கல்வி முறையை இந்தியாவில் கொண்டு வருவதும் இந்தியாவின் நோக்கமாகும். கல்வியியல் இரகசியங்களை அறிவதும் இந்தியாவின் நோக்கங்களில் ஒன்றாகும். ஜேர்மனியில் பணிபுரியும் துறைசார் இந்திய பணியாளர்கள் தொட்டு, கல்வி கற்கும் மாணவர்கள் வரை பலர் றோவின் ஒற்றர்களாகவும் வேலை செய்கிறார்கள். இவர்கள் அப்பாவித்தனமான முகப் பாவனை கொணடவர்களாக தோற்றமளிப்பவர்களாக இருப்பார்கள். தாம் பணிபுரிவதற்கோ அல்லது கல்வி கற்பதற்கேதான் ஜேர்மனிக்கு வந்ததாகக் காட்டிக் கொள்ளும் இவர்கள்,




ஆடம்பரமான உடைகளை அணிய மாட்டார்கள்.

இவர்களில் பெண் ஒற்றர்களும் இருக்கிறார்கள். மருத்துவமனைகளில் தாதிகளாக பணிபுரியும் ஆண், பெண் என இரு பாலினத்தவரில் ஒற்றர்களாக செயல்படுபவர்களும் உண்டு. இந்தியா, ஐரோப்பிய நாடுகளுக்குள் ஊடுருவுவதற்குக் காரணம் அமரிக்கா போன்று தான் வடிவமைத்த அரசுகளை ஆசியப் பிராந்தியத்தில் கொண்டு வந்ததது போல, ஐரோப்பிய நாடுகளுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதற்காகல்ல. இந்தியா பொருளாதாரத்திலும், இந்திய மக்களின் வாழ்வினையும் முதன்மை மிக்கதாக ஐரோப்பிய நாடுகள் போன்றோ அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கு ஒப்பானதாக இருக்க வேண்டுமென்பதற்காகவே!.

தனது நாட்டை பொருளாதாரத் துறையிலும், உற்பத்தித் துறையிலும் முதன்மை நாடாகக் கொண்டு வந்து, இந்திய ரூபாயை அமெரிக்காவின் டொலருக்கு ஈடாக, யூரோவுக்கு ஈடாக, பிரித்தானிய பவுண்டுக்கு ஈடாக, உலகளாவிய ரீதியில் இந்தியப் பணமும் புழக்கத்தில் இருக்க வேண்டுமென்பதும் இந்தியாவின் தூரநோக்கு குறிக்கோளில் ஒன்றாகும்.

ஜேர்மனியில் ஆங்காங்கே இருக்கும் வேறுநாட்டு உணவகங்களில் ஜேர்மனிய மக்களினால் விரும்பப்படும் உணவகங்களாக இருப்பவற்றில் சீன, இந்திய உணவகங்கள் இருந்து வருகின்றன. ஏற்கனவே ஜேர்மனிய மக்களின் மனதில் இருந்து வருகின்ற இந்தியாவைப் பற்றிய நல்ல அபிப்ராயமும், இந்திய உணவகங்களும் அவர்களின் கவனத்தைக் கவருவதன் மூலமும் இந்திய ஒற்றர்களுக்கு தாம் பெற வேண்டிய தகவல்களைப் பெற உதவியாக இருக்கின்றது.

இவை கவனத்திற்குரியவை அல்ல, இத்தரவுகளால் எவ்வித பலனும் இந்தியாவுக்குக் கிடைத்துவிடாது என்று ஒரு பொதுமகன் எண்ணலாம். ஆனால், அவை விஞ்ஞானத்தின் சூட்சுமம் மாதிரி அவை இந்திய உளவு நிறுவனத்திற்கு முக்கியமானதே!.

மதுவில் விருப்பமுள்ளவரிடமிருந்து இரகசியத்தைப் பெற வேண்டுமெனில், அவரைவிட தான் மதுப்பிரியன் என்பது போன்றும், வகை வகையான மதுக்களின் போதை, உருசி போன்றவற்றை விதந்துரைத்து, அவரைத் தனது வலைக்குள் கொண்டு வந்ததன் பின், இரகசியங்களைப் பெற்று விடுவது போல, பெண்ணாசை கொண்டவர்களிடம் உலக நாட்டுப் பெண்களின் இயல்பினையும், இந்தியப் பெண்களின் வகையினையும் கவரும் விதத்தில் சொல்வதில் இந்திய உளவு நிறுவன ஒற்றர்கள் போல எந்த உளவு நிறுவன ஒற்றர்களும் இருக்க முடியாது.

**(தொடரும்)**



# BCN TRAVELS (REISEBÜRO)

## Consulting Network.ug

(Travels-Business-Worldwide)

RYANAIR

easyJet

KLM

Emirates

AIR CANADA

SINGAPORE AIRLINES

QANTAS

International Monye Transfers

Ria
Worldwide Money Transfer

small world
Money Transfer

Last Minute Tickets avaliable on Sunday and Holidays

**Tel : 01638714369**

Flugtickete und hotel kann man auch hier buchen

Rheinische str-72
44137 Dortmund

023110876360
023110876361
Fax : 023110876362

bcntravels@hotmail.de

*People's Insurance*
*Covid19 Insurance*

Health Declaration Form
Ministry of Health - Sri Lanka

**SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA**

AIR FRANCE

Lufthansa

الطيران العماني OMAN AIR

QATAR AIRWAYS القطرية

एअर इंडिया AIR INDIA

BRITISH AIRWAYS

www.bcn-travels-dortmund.com



றமேஷ்

# ரணிலும் ஒரு கொடாக் கண்டன்தான்

பிப்ரவரி 4இல் தமிழருக்கான தீர்வு என ரணில் சொன்ன பொழுது, வழமைபோல எங்கள் தவளைகள் எல்லாம் இரவுப் பகலாய் ஊடகங்களில் கத்தித் தொலைத்தன. சில பனங்காட்டு நரிகள்தான் இது தனக்கான இருப்பைத் தேடும் நரியார் ரணிலின் தந்திரம் என உணர்ந்து அமைதி காத்தன.

அந்த நாளும் வந்தது போனது. ரணிலுக்கு உள்ளாட்சித் தேர்தல் என்ற பல்லவி கை கொடுத்தது. எங்கள் தமிழ் அரசியல் தமிழ்த் தலைவர்கள் வரிசையாக அந்த வெள்ளத்தில் விழுந்து தொகுதிக்கும், தேர்தலுக்கும் முட்டி மோதி, கட்டுப் பணத்தைக் கூடக் கட்டின. இப்பொழுது 'கிணத்தைக் காணமே' என்கிற வடிவேலுவின் நிலையில் எங்கள் கோமாளித் தலைவர்கள் அடுத்த அறிவித்தலை எப்போ ரணில் விடுவிப்பார? என ஆவலாகக் காத்துக் கிடக்கிறார்கள். ரணில் எப்போ பொதுத் தேர்தலை அறிவிப்பார், ஆளை நாட்டை விட்டே துரத்தலாம் என எதிர்க் கட்சிகள் தருணம் பார்த்துக் காத்திருக்கின்றன.

அதனால் எப்படிக் கிடைத்த அதிபர் பதவியைக் கெட்டியாக வைத்திருக்க முடியும்? என்ற எண்ணம் ரணிலின் கனவாக இருப்பதை யாரும் மறைக்க முடியாது. ஆனால், ரணிலுக்குப் பின்னால் அமெரிக்கா இறங்கி விட்டது. காரணம், இலங்கைமீது சீனாவின் கால்கள் ஆழப் பதிந்துவிட்டன. அதனை இந்தியாவால் தனியாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என்கிற உண்மை உலகறிந்த இரகசியம் ஆகிவிட்டது.

இந்தியாவால் இலங்கையையும், சீனாவையும் ஒன்றாகக் கையாள முடியாது என்கிற வாதங்கள் அமெரிக்க சார்பாக வைக்கப்பட்டாலும், உண்மையான கள நிலையும் அவ்வாறுதான் உள்ளன. ரணில் தலைமையிலான சிங்கள அரசின் முழு இலங்கையையும், சிங்களவரின் புத்தர்களின் பூமியாக மாற்றும் எல்லை கடந்து கச்சைத் தீவையும் பிடித்து விட்டது.

எனவே, இந்தியாவைப் பொறுத்த வரை இலங்கை அதன் தொண்டைக்குள் சிக்கிவிட்ட மீனின் முள்ளாக விழுங்க முடியாத தவிப்பு ஒரு புறம், வெளியில் கக்க முடியாத அவலம் மறுபுறம். அமெரிக்காவின் இலங்கை வருகை



இந்தியாவுக்கு வரமாகக் கிடைத்த சாபம். மறுபுறத்தில் தமிழர்களைப் பொறுத்த வரை தலை இடி மாறி, வாந்தி பேதி வந்தது போலத்தான் வருங்காலம் அமைந்து விட்டது.

திருமலைக் கடற்படைத்தளம், கடற்பரப்பு 30 வருட குத்தகைக்கு அமெரிக்கா வாங்கி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 50 வருடங்களுக்கு மேலாக கூடாரத்துள் மூக்கை நுழைக்க பாடாய்த் துடித்த அமெரிக்க ஒட்டகம், இப்போ கூடாரத்துக்குள் வந்து படுத்து விட்டது.

அமெரிக்காவின் டீகோ காசிய தென்கிழக்காசிய இராணுவ கட்டளைப் படைத்தளம் இலங்கையில் செயற்பட வசதியாக, அமெரிக்காவின் இரண்டு ஒப்பந்தங்களும் இலங்கை அம்பாந்தோட்டை, திருகோணமலை கடற்படைத் தளங்களை மையமாக வைத்து செயற்பட நிபந்தனை அற்ற ஆதரவும், வசதியும் வழங்க வேண்டிய கட்டப்பாட்டில் ரணில் தலைமையிலான அரசு உள்ளது.

ஆட்சி அதிகாரத்தில் நிலைத்து நிற்கும் வெறியுடன் செயற்படும் ரணிலுக்கு, அமெரிக்கா கிடைத்தற்கு அரிய வரம். அதனால் ரணில் அமெரிக்காவின் காலை விட்டு எக்காரணம் கொண்டும் விலகிச் சீனாவையோ, இந்தியாவையோ நம்பி நடக்க மாட்டார்.

அமெரிக்காவுக்கும் ரணிலை விட்டால் வேறு நல்ல தெரிவு சிங்கள மக்கள் மத்தியில் கிடைக்க முடியாது. எனவே, அமெரிக்காவின் தயவால் விரைவில் உலகின் எல்லா கந்து வட்டிக்காரர்களும், அமைப்புகளும், நிறுவனங்களும் ரணிலை ஆட்சியில் வைக்கத் தேவையான வசதிகள் அனைத்தையும் வழங்கி, ஒரு ‘ஜென்டில்மன் சர்வாதிகாரி’யாக ஆட்சி நடத்த வைப்பார்கள். கடனும், கந்து வட்டியும் கட்டும் அடிமைகளாக, அப்பாவிப் பொது மக்கள் பலியாவார்கள்.

இனி தமிழருக்கான எந்த உரிமையையும், உள்நாட்டில் வாங்கிவிட எந்தக் கொம்பனாலும் முடியாது. வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் தமிழ்



அமைப்புகள், தாய் நாட்டின் மக்கள் ஆதரவைப் பெற முடியாமல் காணப்படும் நிலையில், தனித் தமிழ் ஈழம் காண்பது, முயல் கொம்பாகிய நிலைதான் தெரிகிறது. சர்வதேச சட்டங்களின் கீழ் எந்தத் தீர்வையும் களத்திலும், புலத்திலும் போராடிப் பெற வல்ல தமிழ் அரசியல்வாதிகள், இனிமேல் பிறந்தால்தான் தமிழருக்கு விடியல் வரும்

சீனாவிடம் இருந்து தாய்வானைப் பறித்து விட வேண்டும் என்கிற அமெரிக்காவின் 65 வருட வெறி, சீனாவால் முறியடிக்கப்பட்டு, அண்மையில் அமெரிக்க கடற்படைக் கலங்கள் சீனாவால் தாய்வான் கடல் பரப்பிலிருந்து விரட்டி அல்லது வெற்றி கரமாக அமெரிக்கா பின்வாங்க வைத்து விட்ட செய்தியானது, அமெரிக்க சீன மோதல் இலங்கையில் அல்லது இலங்கையைச் சுற்றிய கடற்பரப்பில் தொடங்கும் சாத்தியம் தெரிகிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, பதவியில் இருக்கும் தந்திரம் ஒன்றுதான் தற்போது அவருக்கு உள்ள ஒரே தெரிவு. எனவே, கடன் வழங்கும் நிறுவனங்களும், உலக நாடுகளும் போடும் நிபந்தனைகளை நிறைவு செய்யாமல் கடன்களும் கிடையாது, ஆட்சியும் நடத்த முடியாது.

பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனதா விமுக்தி சஜித் பிரேமதாசா உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் போராடி வருகின்றன. அப்படி தேர்தல் நடந்தால் ரணிலின் ஆட்டம் முடிந்து விடும். அதன் பின்னர் அவர் அதிபர் தேர்தலை நடத்தி வெற்றி பெறவும் முடியாது. மகிந்தர் கோட்டபாயாவின் துணை இல்லாமல் அதிபராகும் வாய்ப்பு கிடைக்காது.

அவரை பதவியில் நிலைக்கச் செய்யாமல் அமெரிக்கா எதுவும் செய்ய முடியாது. அப்படியானால் அமெரிக்கா தேர்தலை நடத்தாமல், இராணுவ ஆட்சிக்கு ரணிலை வைக்குமா? அல்லது ஒரு பொம்மை இராணுவத் தலைமையை உருவாக்கி, சீனாவை அகற்ற முற்படுமா?

எப்படியும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வாய் நிறைய அல்வாதான் கிடைக்கும்.





# ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலயம் யூச்சின்

## யூச்சின், ஸ்ரீ நவசக்தி விநாயகர் ஆலய
## வருடாந்த மஹோற்சவ பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம் 2023

**விநாயகப்பெருமான் மெய்யடியார்களே!**

ஐரோப்பா கண்டத்தில் சகல வளங்களும் நிறைந்த, ஜேர்மன் நாட்டின் யூச்சின் பதியில், நவரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளுகின்ற பார்வதி பரமேஸ்வரனின் புத்திரனும், மூசிக வாகன பிரியன் வேளமுகத்து விநாயகனின் வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் சோபகிருது வருடம், உத்தராயணம், வைகாசித் திங்கள் 12ம் நாள் (26.05.2023) வெள்ளிக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி, 13ம் நாள் (27.05.2023) சனிக்கிழமை துவரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று, தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. எனவே, அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து, விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுகின்றோம்.

### கிரிகைகள் விபரம்

*26.05.2023 வைகாசித்திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை*
*மாலை 3.30 மணிக்கு கணபதிஹோமத்துடன் அனுக்ஞை, கிராமசாந்தி,*
*வாஸ்துசாந்தி, மிருத்சங்க்ரஹணம் பூர்வாங்க கிரிகைகள் நடைபெறும்.*
*27.05.2023 துவஜாரோகணம். 12.00 மணிக்கு (கொடியேற்றம்)*
*மாலை யாகரம்பம் சூரியபிறை*
*28.05.2023 2ம் திருவிழா - மாலை சந்திரபிறை*
*29.05.2023 3ம் காலை - மாலை தீப திருவிழா*
*30.05.2023 4ம் திருவிழா காலை - மாலை வேதபராயணம்*
*31.05.2023 5ம் திருவிழா காலை - மாலை பக்தி முக்தி பாவணோற்சவம்*
*01.06.2023 6ம் திருவிழா காலை - மாலை மாம்பழத்திருவிழா*
*02.06.2023 7ம் திருவிழா காலை - மாலை மிருகயாத்திரை (வேட்டைத்திருவிழா)*
*03.06.2023 8ம் திருவிழா காலை - மாலை சப்பைரதம்*
*04.06.2023 9ம் ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவம் முத்தேர் பவனி*
*11.00 மணிக்கு தெரு வீதி உலா.. காலை 8.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி*
*9.30 மணிக்கு பூஜை. 10.00 மணி ஸ்தம்ப பூஜை. 10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை.*
*11 .00 மணிக்கு நவசக்தி விநாயகப்பெருமான், மீனாக்ஷி சுந்தரேஸ்வரப்பெருமான்,*
*வள்ளி தேவசேநா சமேத சுப்ரம்மண்யப்பெருமான் ஆகிய மூர்த்திகளும்.*
*அழகிய இரதத்தில் (முத்தேர்) ஆரோகனித்து 2.00 மணிக்கு எம்பெருமானிற்கு*
*பச்சை சாத்தப்பட்டு தேரடியில் பஞ்சமுக அர்ச்சனையைத் தொடர்ந்து*
*பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்று அடியார்களிற்கு அருட்பிரசாதம் வழங்கப்படும்.*
*05.06.2023 10ம் நாள் காலை தீர்தோற்சவம்,யாககும்பாவிஷேகம்.*
*மாலை திருவூஞ்சல் துவஜா அவரோகணம்(கொடியிறக்கம்)*
*சண்டேஸ்வரர் உற்சவம், சிவாச்சாரியர் உற்சவம்.*
*06.06.2023 11ம் நாள் காலை அபிஷேகமும் சுற்றுப்பிரகாரமும், மாலை பூங்காவனம்.*
*07.06.2023 பைரவர் சாந்தி சங்கடஹர சதுர்த்தி உற்சவம்.*


ஆலய தொடர்புகட்கு

**ஆலயம் 02164.7020974**

**தலைவர் 01797269334**

**பொருளாளர் 015223926820**


திருவிழாக்காலங்களில் அடியார்கள் காலதாமதமின்றி ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆலயத்திற்கு உங்களால் இயன்ற தொண்டுகளை செய்வதோடு பூஜைக்குத் தேவையான பூ, பால், தயிர், எண்ணை, இளநீர், நெய், பழவகைகளையும் எடுத்து நவசக்தி விநாயகப் பெருமானின் அருளைப்பெற்று மண்ணில் இம்புற்று ஆனந்தமாக வாழ்வீர்களாக!

"மேன்மை கொள் சைவ நீதி! விளங்குக உலகமெல்லாம்!!"
"தமிழ் எங்கள் மொழி சைவம் எங்கள் வழி!!"

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

**பாகம் : 34**

தாய்மொழி வழிக் கல்வியே மாணவர்களின் கல்விக்குச் சிறந்தது என பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அதுபோக தமிழ்வழிப் பள்ளிகளே இன்று 'தமிழர்' என்ற அடையாளத்தை ஊக்குவிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. ஆனால், பலகாலமாக ஆங்கிலவழிப் பள்ளிகளும், மத்தியப் பாடத்திட்டங்களும் பெரிய அளவில் தமிழ்ப்பள்ளிகளை அழித்து வருகின்றன. இன்று அவை இன்னும் வீரியத்துடன் செயல்படுகின்றன. அதனால் தமிழ்வழியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே செல்கிறது. மத்திய அரசின் வரலாற்றுப் பாடம், தேசிய அடையாளத்தை வளர்க்க செயல்படுமே அன்றி, தமிழர் அடையாளத்தை முன் நிறுத்தாது.

தமிழ் வழிக் கல்வி என்பது, மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு மட்டுமின்றி, ஒரு தேசியம் தனது அடையாளத்தைத் தக்க வைப்பதற்கும் அடிப்படை என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம். அதனால் தமிழ்வழிக் கல்வியை உருவாக்கும் சவாலில் நாம் வெற்றி பெறுவது மிக முக்கியமானதாக இருக்கிறது. ஆனால், இதுவரை அது நடக்கவில்லை. இக்கட்டுரையில் இந்தச் சவாலை எதிர்கொள்ள, பரவலாக அறிவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்ட கருத்துகளையும், தந்திரமுறைகளையும் கொண்டு ஒரு புத்திசாலித்தனமானத் தந்திரத்தை வடிவமைப்போம்.

தற்பொழுதைய நமது பொறிமுறைகள் நேரடியாக ஆங்கிலப் பள்ளிகளை எதிர்கொள்ளுதல் என்ற உத்தியை அடிப்படையாகக் கொண்டது. நாம் தமிழ் பள்ளிகளின் தரத்தை உயர்த்தி விட்டால், நாம் ஆங்கில வழிப் பள்ளிகளை வெற்றி கொண்டு விடலாம் என்ற எண்ணம் நிலவுகிறது. இது தோல்வியடைவதற்கான வாய்ப்புகளே அதிகம். அதற்காக காரணங்கள் அனைவரும் அறிந்ததே!

1. மேற்கல்விகள் மற்றும் வேலை வாய்ப்புகள் ஆங்கிலத்திலேயே உள்ளன. அதனால் ஆங்கிலவழி மாணவர்களுக்குப் பெரிய அனுகூலம் உள்ளது.

2. ஆங்கிலம் தமிழைவிடத் தகுதி வாய்ந்தது என்று பரவலாக கருதப்படுகிறது. அவ்வாறு இருந்தால், தகுதி குறைவான மொழி பேசும் மக்கள், தகுதி கூடுதலான மொழிக்கு தாவுவார்கள் என்பது மொழி ஆராய்ச்சியாளர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

## தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது



நாம் தமிழ்வழிக் கல்வியின் தரத்தை உயர்த்தினாலும், நாம் மேலுள்ள இரண்டு காரணங்களையும் நம்மால் பெரிதாக மாற்ற முடியாது. அதனால், இந்த உத்தியின் மூலம் நம்மால் வெற்றி கொள்ள முடியாது அல்லது வெற்றிக் கடினமானது; இதனால் நாம் வேறு உத்திகளையே அணுக வேண்டும். அதற்காகத் தமிழ் வழிப் பள்ளிகளை தரம் உயர்த்தக் கூடாது என்பதல்ல. அவற்றின் தரத்தை உயர்த்தவேண்டும். ஆனால், நாம் அதன் வழியாக மட்டும் சென்று வெற்றியடையப் போவதில்லை.

உத்தி 1 : முதலில் நாம் எந்த இடத்தில் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்த முடியுமோ, அங்கு ஆரம்பிக்க வேண்டும்.

இந்தத் தந்திரம் தொழில் முனைவோருக்கு அடிப்படைப் பாடமாக சொல்லித் தரப்படுகிறது. ஆழ்ந்து நோக்கினால், இதன் அடிப்படையில்தான் உயிர்களே பரிணமிக்கின்றன. உயிர்களின் உச்ச வளர்ச்சியான மனிதன் நிலத்தில் ஆதிக்கம் செலுத்தினாலும், உயிர்களின் ஆரம்பப் பரிணாமம் நீரில் தோன்றின. பின் நிலத்திற்கு வந்தன. அதன் பின் வானிற்குத் தாவின, இனி விண்ணுக்கும் தாவும். எங்கு சாதகமான சூழல் நிலவுகிறதோ, அங்குதான் ஆரம்பிக்க வேண்டும். அதில் வெற்றி கண்டு, ஆதிக்கம் செலுத்தியபின் மற்ற இடத்திற்குத் தாவலாம்.

டெசுலா ஊர்திகள் முதலில் சொகுசு வாகனங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றி கொண்ட பின்னரே, பொதுவான வாகனங்களுக்குத் தாவியது. மதங்களும் அவ்வாறே தாவுகின்றன. அடிமைப்பட்ட இசுரேலில் ஏசு போதித்தாலும், முடிவில் அதன் வெற்றிகரமான ஆரம்பம் ரோமாபுரியிலேயே ஆரம்பித்தது. ஒதுக்குப்புறமான பாலைவன அரேபியாவில் தோன்றிய இசுலாம், உலகம் முழுவது பரவியது. அவ்வாறே நோய் கிருமிகளும் பரவுகின்றன. கண்காணாத, கேள்விப்படாத இடத்தில் தோன்றும் கிருமிகளினால் உலகமே நடுங்குகிறது. எங்கு நாம் வெற்றி பெற சாதகமானச் சூழ்நிலை இருக்கிறதோ, ஆதிக்கம் செலுத்த முடிகிறதோ அங்குதான்





ஆரம்பிக்க வேண்டும். அதன் பின்பு எங்கு வேண்டுமானாலும் தாவலாம்.

தற்பொழுது கல்விச் சாலைகள் என்பது, பெரும்பாலும் மனப்பாட சாலைகளாக மாறிவிட்டன. மனப்பாடம் செய்து அப்படியே எழுதுபவர்களுக்கு அதிக மதிப்பெண் கிடைக்கும். தானாகப் புரிந்து, சொந்த மொழியில் எழுதினால் மதிப்பெண் குறையும். புரிதலுக்கும், படைப்புக்கும் எந்த ஒரு அனுகூலமும், மதிப்பெண்ணில் இல்லை. இதில் போய் நாம் போட்டி போடுவது என்பது, இழுக்கானச் செயலாகும். மேலும் அதில் போட்டியிடும் கல்வி நிறுவனங்களின் திறமை, பல வருடங்களாகக் கூர் தீட்டப்பட்டுள்ளன.

அவர்களுடன் போட்டி போடுவதும் முடியாத காரியம். அவர்களே இதில் ஆதிக்கம் செலுத்தட்டும். நாம் நமக்கென்று யாரும் போட்டிபோடாத தனிப்பாதையை அமைப்போம். சுருக்கமாக அடிப்படையில் நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், ஒரு தமிழ் வழிக்கல்வி அமைப்பை உருவாக்க வேண்டும். இது மாலைநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் இயங்கும். அது இரண்டு செயல்பாடுகளை மையமாகக் கொண்டிருக்கும்.

1. கல்வி : எந்தத் தமிழ்வழி பள்ளியிலோ, ஆங்கில வழிப் பள்ளியிலோ படிப்பவர்கள் யார் வேண்டுமானாலும் நமது அமைப்பில் இணையலாம். ஆனால், அவர்களுக்குத் தமிழில்தான் நமது கல்வி அமைப்பில் கற்பித்தல் நடைபெறும். கல்வி அமைப்பின் தரம் எப்படி இருக்குமென்றால், அதில் இணைந்து படிக்கும் மாணவர்கள் சிறந்த சாதனையாளர்களாக உருவாகுவார்கள். அவர்களின் சாதனை, நம் அமைப்பில் இணையாத மாணவர்களை விட அதிகமாக இருக்கும். அவர்கள் அவ்வாறு இணையா விட்டால், கல்வி வேலைவாய்ப்பு போட்டிகளில் பின் தங்குவார்கள் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

இந்த ஒரு ஒற்றைக் காரணம் அனைத்து மாணவர்களையும், ஆங்கிலவழி




மாணவர்கள் உட்பட, நமது தமிழ்வழிக் கல்வி அமைப்பில் இணைவதற்குக் காரணமாக அமையும். அனைவருக்கும் தமிழ்வழிக் கல்வி என்பது சாத்தியமாகும். இது தமிழ் வழிக் கல்விக்கு எதிரான மேற்கூறிய முதல் காரணத்தை உடைக்கிறது. தமிழ் வழியில் நமது அமைப்பில் படிப்பதன் மூலம், மாணவர்களின் வெற்றி உயர்கிறது. கீழுள்ள படத்தைப் பார்க்கவும்

2. பண்பாடு : இந்த இரண்டாவது செயல்பாடு மாணவர்களை மட்டுமில்லாமல், பொது மக்களையும் இணைத்துச் செயல்பட வேண்டும். படிக்கும் மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் தமிழர் என்ற அடையாளத்தை அவர்களிடம் உருவாக்கி, அதை அவர்களின் உணர்வுகளுடன் பிணைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களிடம் தமிழ், ஆங்கிலத்தைவிட முக்கியம், உயர்ந்தது என்ற எண்ணம் தோன்றும். அவர்கள் மொழி வளர்ச்சிக்கு இணைந்து உழைப்பார்கள்.

இது ஏனென்றால், தமிழ் அடையாளம் ஒருவரின் சுயத்தில் அங்கமாக இருக்கும் பொழுது, அவர்களால் தமிழைக் கீழாகக் கருத முடியாது. அவ்வாறு செய்தால், அவர்கள் தங்களையே இழிவாகாக் கருதுவதாகும். அவ்வாறு இழிவாகக் கருதுவது நடக்க முடியாத காரியம். இது தமிழ் வழிக் கல்விக்கு எதிரான மேற்கூறிய இரண்டாவது காரணத்தை உடைக்கிறது

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

ENESAR
N.S.R.
என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**
**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



**சேதுராமலிங்கம்**

**சென்ற மாத தொடர்ச்சி...**

நாகரீகங்களின் அழிவை ஆராய்ந்த வரலாற்றாய்வாளர் இடாயின்பீ இவ்வாறு கூறுகிறார். “ஒரு நாகரீகம் அழிவதற்கு முன்பு, மக்களிடம் ஒற்றுமை குலைந்து போகிறது, அதனையும் தாண்டி நாட்டைத் தக்க வைக்க, ஒரு சிறுபான்மையினர் அந்நாகரீகத்தை முழுதாக உள்ளடக்கிய பெரு நாட்டை உருவாக்கி, ***(Universal State)*** அடக்கி ஆள்வர். ஆனால் இது தோற்கும் உத்தி, முடிவில் அந்நாகரீகம் அழிகிறது. உரோமப் பேரரசு இவ்வாறுதான் அழிந்தது”. இடாயின்பீ அடிப்படையில் கூறுவது, தயனிசியன்தான் ஒரு நாகரீகத்தைத் தக்கவைக்கிறது. அடக்குமுறை எல்லாம் அதன் அழிவின் ஆரம்பகட்ட அறிகுறியே. இன்று இந்துத்வா அதுபோன்ற அழிவையே எதிர்நோக்கி இருக்கிறது.

இனி தயனிசியப் பண்புகளை எவ்வாறு மக்களிடம் விதைத்து, தக்கவைப்பது என பார்ப்போம்.

இவ்வுலக வாழ்க்கை அவலங்கள் நிறைந்தது. இன்று இருப்பவன் நாளை இல்லை என்ற நிலையாமை கொண்டது. நல்லவனுக்குத் துன்பமும், கெட்டவனுக்கு இன்பமும் மாற்றி வழங்கும் தன்மை இயற்கையானது. இவ்வுலகை எதிர்கொள்ள இருவழிகள் உள்ளன. ஒன்று, இவ்வுலகை மறுத்துவிட்டு “உலகம் பகுத்தறிவானது, நீதியானது, ஒழுங்கானது” என்று ஒரு கனவுலகில் வாழ்வது. இது அப்பலோனியன் வாழ்வு முறை. ஏதாவது தீங்கு ஏற்பட்டால் நான் யாருக்கும், எந்த தீங்கும் செய்யவில்லையே! எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? என்று புலம்புவது. இன்னொரு வழி என்பது, வருவது வரட்டும், ஒரு கை பார்த்து விடுவோம் என்று கலங்காமல் துணிவுடன் வாழ்க்கையை எதிர்கொள்வது. இது தயனிசியன் வாழ்வு முறை.

புறநானூறு நூலைப் படித்தால், அன்றைய மக்கள் உலக வாழ்க்கையை உள்ளதை உள்ளபடியே பார்த்து, அதைத் துணிவுடன் எதிர்கொள்ளும் மனபலத்தையும் காணலாம். பண்டைய கிரேக்கர்களும் அவ்வாறே வாழ்ந்தனர். அதுதான் ஒரு சமூகத்தை வீரத்திலிருந்து, அறிவு, கலை, இலக்கியம், செல்வம் என அனைத்திலும் சாதனைகளின் உச்சிக்குக் கொண்டு செல்கிறது. புலிகளின் வாழ்வு தயனிசியன் வாழ்வுமுறை என்பது சொல்லாமலே விளங்கும். தயனிசியன் என்பது உயிரூற்று. அதைப் பருகுபவர்கள் வாழ்ந்து சாகிறார்கள், மற்றவர்கள் செத்துச் செத்து வாழ்கிறார்கள்.

தமிழ் சமூகத்தில் தயனிசியன் நீண்டகாலமாக செத்துக் கிடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். பிரபாகரன் வந்த பின்னர்தான் தயனிசியன் பெருகி இருக்கிறது.



# தமிழினத்தின் தயனிசியன் பிரபாகரன்

ஆனால், இன்னும் முழு சமூகத்திற்கும் இது பரவவில்லை. அதை பரவ வைப்பத்தில்தான் நாம் வாழ்வோமா, அழிவோமா என்பது இருக்கிறது. அதனால் இன்றைய அதிமுக்கிய கேள்வி என்பது, மக்களிடம் எவ்வாறு தயனிசியப் பண்புகளை வளர்ப்பது? என்பதுதான்.

அதை வளர்ப்பதற்கு நமக்கு அவல நாடகங்கள் தேவையில்லை, பிரபாகரனின் வரலாறு போதுமானது. இதைச் சிறுவயதிலிருந்து அனைவருக்கும் கற்பித்தால், எல்லையில்லா தயனிசிய உணர்வுகள் மக்களிடம் தோன்றும். அது அரசியலிலிருந்து அறிவாற்றல் வரை அனைத்து சாதனைகளையும் படைக்கும். தமிழர் நாகரீகம், உலகிலேயே அதிக சாதனைகள் படைக்கும் சமூகமாக மாறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. பிரபாகரன்தான் தமிழினத்தின் தயனிசிய ஊற்று.

தயனிசியன் என்பது உணர்வுகள் சார்ந்தது என்பதால், ஒருவரை பகுத்தறிவால் விளக்கிப் புரியவைத்து, தயனிசியனை அளிக்க முடியாது. ஒரேவழி என்பது தயனிசிய ஊற்றைப் பருக வேண்டும். அவ்வூற்று பிரபாகரன் என்ற ஒற்றை மனிதனிடம்தான் தமிழனத்தில் இருக்கிறது. இங்கே பருகுவது என்பது, பிரபாகரனைக் கற்று, மாவீரர்களைப் போற்றி, நினைவுக் கூர்ந்து உணர்வால் ஒன்றிணைவது. அப்பொலோனிய உலகில் ஊறிப்போயிருக்கும் வளர்ந்த பெரியவர்களை மாற்றுவது கடினம். ஆனால் வளரும் இளையவர்களை எளிதில் உணரவைக்க முடியும்.

மக்களை மாற்ற ஒரு வலிமை வாய்ந்த கருவி உள்ளது. அதன் பலம் இன்னும் உணரப் படவில்லை. அந்தக் கருவி என்பது இசை. “இசை என்பது மொழிக்கு முன்பே தோன்றியது. இசையால் உண்டாகும் உணர்வுகள் மொழிக்கு அப்பாற்பட்டது. இவ்வுலகு என்பது மூலப்பொருளின் (இயற்கையின்) விருப்பத்தின் விளைவாக உருவானது. இசை என்பது அவ்விருப்பத்தின் நகல்” என்கிறார் தத்துவமேதை சோப்பனவர். இதன் பொருள் என்னவென்றால், இவ்வுலகில் இருக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும், பொருளுக்கும் இணையான இசை உண்டு. இதைப் பாடல்களைக் கேட்கும் அனைவரும் உணரலாம்.




ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஏற்ற சரியான இசையை உருவாக்க முடியும். உதாரணமாக மகிழ்ச்சிக்கு ஒரு இசை, சோகத்து இன்னொன்று, திகிலுக்கு வேறு இசை, தெய்வீக இசை என்று காணலாம். திகில் படங்களில் திகிலூட்டும் பின்னணி இசையை எடுத்துவிட்டால், அப்படத்தில் திகிலே இருக்காது. இங்கே உணர வேண்டியது, திகிலை உருவாக்குவது படம் இல்லை, இசைதான். அதனால்தான் இசையின் வழியாக எளிதாக எதையும் உணர்த்திவிடலாம். இன்றைய சிக்கல் என்பது, இசை என்பது போலித்தனங்களை, சிற்றின்பங்களைக், அடிமைத்தனங்களை மக்களுக்குக் கற்பித்துக் கொண்டிருக்கின்றன. இதுபோன்ற இசையை 'அப்போலோனிய இசை 'என்கிறார் நீட்சே.

தயனிசியன் என்பது மூலப்பொருளை உணர்த்துவது, அவலத்தை, வீரத்தை உணர்த்துவது. அடிப்படையில் தயனிசியப் பண்புகளை உணர்த்துவது. உதாரணமாக சில பாடல்களில் இதை உணர்ந்தேன். ஒன்று "எங்கள் தலைவன் பிரபாகரன், அந்த முருகனுக்கே நிகரானவன்". இப்பாடல் தெய்வீக இசையில் அமைவதால், அதுதான் பிரபாகரனுக்குச் சரியாகப் பொருந்துகிறது. ஏன் பிரபாகரன் தெய்வீகமாகிறார்? என்று ஏற்கனவே இக்கட்டுரையில் பார்த்துவிட்டோம்.

இரண்டாவது 'பச்சை வயலே', 'தாயகக் கனவுடன்', 'அச்சம் என்பது மடமையடா' பாடல்கள். இப்பாடல்கள் அவலத்தையும், சோகத்தையும், தேவையான வீரத்தையும் வலியுறுத்துகிறது. இசை என்பது இயற்கையின் விருப்பத்தின் நகல் என்பதால், ஒருவரின் விருப்பத்தை மாற்றும் வல்லமை இசைக்கு உண்டு. இன்றைய சமூக அழிவிற்கான பெரும்பங்கு இசைக்கு உண்டு என்பது மிகையல்ல.

அன்றைய பிளேட்டோ, கிரேக்க சமூகத்தின் அழிவிற்கு பெரும்பங்கு வகித்ததில் அவர்களின் தலைசிறந்த இசைஞானிகளுக்கு பெரும்பங்கு உண்டு என்கிறார். ஒரு சமூகம் எதுபோன்ற இசையை உருவாக்குகிறது? என்பதில்



கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் அவற்றிற்கு மக்களின் விருப்பு, வெறுப்புகளைத் தீர்மானிக்கும் ஆற்றல் உண்டு. இதை அறிந்துதான் புலிகள் திரைப்படங்களுக்கு இசைகளுக்குத் தணிக்கை விதித்தார்கள். போராட்டத்திற்கான இசையை உருவாக்கினார்கள்.

இன்றைய பெரும்பான்மையான இசை மேதைகள் உருவாக்கும் இசை அபாரமாக இருக்கலாம். ஆனால், அது அழிவை உருவாக்கும் இசை என்பதை, நாம் உணரவேண்டிய தேவை இருக்கிறது. தேனிசை செல்லப்பா அவர்கள், இசைஞானி என்ற பட்டம் இல்லாவிட்டாலும், அவர் சமூகத்தின் வாழ்வுக்கு இசைத்து, மற்ற ஞானிகளைவிட உயர்ந்து நிற்கிறார். அறிவற்ற இனிமையான இசை என்பது, மயிலின் தோகை போன்றது. அது மயிலுக்கு பயன் அற்றது. அது அதன் எதிரிகளிடம் பலியாகவே துணைபுரிகிறது. அதற்காக அப்போலோனிய இசை கூடாது என்று கூறவில்லை. அப்போலோனியன் ஓங்குவதுதான் சிக்கல்.

பிரபாகரனின் உயர்ந்த தியாகம் என்பது, இயற்கையின் ஆழ்ந்த விருப்பத்தையும், ஆழ்ந்த உண்மையையும் பிரதிபலிக்கிறது என்றால், சோப்பனவரின் தத்துவப்படி அந்த உண்மையை பிரதிபலிக்க வேண்டிய ஆழ்ந்த இசையும் இயற்கையில் இருக்க வேண்டும். அவ்விசை உலகின் தலைசிறந்த இசையாக இருக்கும் என்பது சந்தேகமில்லை. அவ்விசையைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை இருக்கிறது. இதுதான் எளிதாக மக்களிடம் தயனிசியனைக் கொண்டு செல்வதற்கான

வழி. கலைகளைச் செப்பனிடாமல், சமூகத்தை உயர்ந்த நிலைக்கு மாற்றுவது முடியாத காரியம் என்றே தோன்றுகிறது.

சுருங்கக் கூறுவதென்றால் ஒரு சமூகத்தின் அடையாளம், ஒற்றுமை, அறிவு, வளர்ச்சி, விருப்பம், அரசியல், ஒழுங்கு, ஆற்றல் என அனைத்தின் பிறப்பிடம் தயனிசியன். அதனாலேயே தயனிசிய உணர்வுககளை உருவாக்குபவர் கடவுளாகச் சமூகத்தில் உயர்த்தப்படுகிறார். தயனிசியன்தான் சமூகத்தின் உயிர். எப்பொழுது அது சமூகத்தில் வளர்கிறதோ, அப்பொழுது சமூகம் வளர்ச்சி அடைகிறது; தயனிசியன் குறையும்பொழுது சமூகமும் வீழ்ச்சி அடைகிறது.

தமிழினத்தின் தயனிசியன் பிரபாகரனே!. அவரைப்போல உணர்வுகளை எழுப்பி, மக்களை ஒன்று திரட்டியவர் எவருமில்லை. வேறு எதற்கும் அவ்வாற்றல் இல்லை. ஆனால் இதை இன்னும் பலர் உணரவில்லை என்பது சோகமானது. இன்றைய பல அறிவு சீவிகள் பிரபாகரனையும், புலிகளையும் நீக்கி, அரசியல் செய்தால் உரிமைகளை நமக்கு அளிப்பார்கள் என நம்புகிறார்கள். அன்று சாக்கரட்டீசின் பிழை எவ்வாறு கிரேக்கர்களை அழித்ததோ, அதுபோன்ற அழிவிற்கே இது வழிவகுக்கும்.

பிரபாகரன் பலரின் பகுத்தறிவிற்கு எட்டவில்லை, அதனால் அவரை நிராகரிக்கின்றனர். இவ்வுலகு என்பது மிகச்சிக்கலானது, பல விடயங்கள் நமது பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டது. தயனிசியன் அவ்வாறான தன்மை கொண்டது. அறிவில் உயர்ந்த சாக்கரட்டீசே பிழை செய்தபொழுது, எந்த கற்றறிந்தவரும் இந்த பிழையில் விழுவது எளிதானது. நானும் ஒரு காலத்தில் பகுத்தறிவுதான் உயர்ந்தது என்றிருந்தேன். திருவள்ளுவரின் ஒரு குறள் இத்தன்மையை நன்றாக விளக்குகிறது:

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

எவ்வளவுதான் கற்றறிந்தாலும் தயனிசியனின் பாதம் பற்றவில்லை என்றால் படித்து பயன் என்ன! இது பகுத்தறிவை நிராகரிப்பது அல்ல, மாறாக பகுத்தறிவின் எல்லையை உணர்வதாகும்.

முற்றும்



மனோ

# சர்வதேச நாணயம் இல்லாத சிங்கள அரசுகள்




‘எள்ளு ஏன் காய்கிறது? எண்ணெய் எடுக்க எலிப் புழுக்கை ஏன் காய்கிறது?’ கூடக் கிடக்கிற குற்றத்துக்காக. இது தமிழரின் பழைய பொன்மொழி. இன்று சிங்களம் ஏன் கடனுக்காக உலகைக் கெஞ்சுகிறது? அதன் ஊதாரித்தனம், வளைக்காத சோம்பல் குணங்களால் தமிழன் வளமான வாழ்வைப் பெறாமையால், தமிழர் உழைப்பால் நாடு பெற்ற வருவாய் அழிந்தாலும், தமிழன் உழைப்பையும், சொத்தையும் அழிப்பதே தன் அரசியலாகச் செயற்பட்டு 1946இல் பணக்கார நாடுகளில் ஒன்றாக இருந்த இலங்கையை, பட்டியலில் இருந்து நீக்கும் நிலைக்கு கொண்டு வந்தது சிங்கள ஆட்சியாளர்களே!.

இன்று தனி மரமாக இலங்கை பட்ட கடன்களுக்காக நாட்டையும், நாட்டு வளங்களையும் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கும், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பட்டா போட்டு அடமானமாகவும், அறுதியாகவும் விற்றுக் கடன்களை அடைத்து வருகிறார். முன்னர் மகிந்தவும் கோட்டபாயாவும், பல பகுதிகளை விற்றும், கடன் தீராத அளவில் வளர்த்து வைத்து விட்டார்கள். கடல் வழியாகக் கள்ளத் தோணிகளில் வந்திறங்கிய, விஜயன் தலைமையிலான கொள்ளைக் கூட்டத்தில் தோன்றிய ஆரிய தெலுங்கர் வம்சாவளி வந்த இனம், இப்படித் தாறுமாறாக நடப்பது ஒன்றும் அதிசயம் இல்லை.



ஆனால், இத்தனை அழிச்சாட்டியங்களையும் சிங்கள ஆட்சியாளர்கள் செய்தும் கூட வாயும் திறக்காமல், மறுப்பும் தெரிவிக்காமல் பணம், பதவிகளைப் பெறுவதில் குறைவின்றி ஒத்துழைத்த பொன் இராமநாதன் தொடக்கம், இரா.சம்பந்தன், சேனாதி ராசா, சுமந்திரன் வரையான தமிழ்த் தலைவர்களை மட்டும் நாம் மன்னித்து விட முடியுமா?

தமிழினம் 1956 தொடக்கம், சிங்களப் பேரினப் பயங்கரவாதம், இராணுவ அடக்கு முறைகள் மீதுள்ள தமிழ் மக்களின் உணர்வுகளையும், எதிர்ப்புகளையும் சரியான முறையில் வெளிப்படுத்தாமல், சிங்கள ஆட்சியாளர்களின் பதவி, பணங்களைப் பெற்று தாங்களும் அடிமைக் கூலிகள் போல் நடந்து கொண்டதோடு, தமிழ் மக்களையும், தமிழர் தேசத்தையும் சிங்கள ஆட்சியாளரின் போக்கில் போக விட்டனர்.









அவர்களின் தான்தோன்றித் தனமான, சுயநல அரசியலால் தமிழினம் நாடும், வீடும், வாழும் உரிமையும் இழந்து ‘கடலுக்கே போங்கள்’ எனச் சிங்கள

அரசியல்வாதிகளும், புத்த பிக்குகளும், ராணுவமும் சொல்லிலும், செயலிலும் காட்டும் அளவுக்குத் தமிழரின் நிலை வந்து விட்டது. தமிழினத்தை உலக நாடுகளிடம் கடன் பட்டே சிங்கள அரசுகள் 1948 தொடக்கம் அழித்து வந்தனர். எம்மை அடக்கி அழித்து, ஒழிக்கச் சிங்களம் பட்ட கடனைத் தமிழர் அடைக்க வேண்டும் எனச் சிங்களம் கேட்பதும், அதற்கு ஆதரவாக எம்மவரும் சில தமிழக அரசியல்வாதிகளும் ஜால்ரா அடிப்பதும், ஈழத் தமிழரை அந்தளவுக்கு முட்டாளாக்க நினைப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்கள்.

இன அழிப்பைச் செய்து விட்டு, தினமும் தமிழர்களின் காணிகளை அபகரித்தும், கோயில்களை அடித்து புத்த விகாரைகளைக் கட்டப்படுவதைக் காணும் நிலையிலும், எமக்காகச் சிறு துளியும் கவலைப்படாமல் இத்தகைய பேச்சுகளைப் பேசும் மனிதரை நாம் எப்படிப் பார்க்க முடியும்? நாயை அடித்தவர்தான் அதன் பீயைச் சுமக்க வேண்டும். அதற்குப் பதிலாக எமது தேசத்தைப் பட்டா போட்டு உலகநாடுகளிடம் கடன் வாங்கிச் சிங்களம் கும்மாளம் போட்டு, பைலா பாடி ஆட, நாம் எதற்கு அவர்களின் ஆட்சியில் தொடர்ந்து வாழ வேண்டும்?

எமது உரிமைக் குரலை இந்தியா, அமெரிக்கா, சீனா ஒரு பொழுதும் செவி கொடுத்துக் கேட்டு, எமக்கான அரசியல் தீர்வைப் பெற உதவப் போவதில்லை. எமது உரிமைப் போராட்டம் இவர்களைத் தவிர்ந்த, பிற உலக நாடுகளின் உதவியால்தான் வென்றெடுக்கப்பட வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் எமக்கான நீதியையும், அரசியல் தீர்வாக இறையாண்மையுடன் கூடிய சுதந்திரத் தனித் தமிழ் நாட்டையும் பெறப் போராட வேண்டும். முடியுமா? முடியாதா? வெற்றியா? தோல்வியா? என்பன அல்ல இன்றைய விவாதத்துக்கான விடயம்.

எங்களின் தேவைகள் இவைதான். அவற்றைச் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக வாதாடி, வெற்றி காண்பது ஒன்றுதான் எமக்குள்ள ஒரே வழி. எங்களின் உலக அரசியல் செயற் பாட்டாளர்களும், அமைப்புகளும் இன்னமும் ஏனோ தானோ என செயற்படுவதை நிறுத்தி, தீவிரமாக உறுதியுடன் செயலாற்றி, வெற்றி பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கைக்கு கடன் வழங்கும் யோசனைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கடந்த (20.03.2023) அனுமதி வழங்கியிருந்ததை அடுத்தே பொருளாதார ஆய்வாளர் இதனை கூறியுள்ளார். இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட விரிவான கடன் வசதியை இலங்கை பெற்றதால் மக்களின் வாழ்க்கைச் செலவு குறையாது என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர் துமிந்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார். இதன்படி இலங்கைக்கு சுமார் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.




# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

"உள்ளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### தும்பி!
பூக்களைப் பறிக்காதீகள்
செடியிலேயே இருக்கட்டும்
பசியோடு தும்பி!.

### காயங்கள்!
அணிலே நகங்களை வெட்டு
பூவின் அழகான முகங்களில்
மோசமான காயங்கள்!.

### தாய்!
பிள்ளையின் எதிர்காலத்துக்காக
தன்னுடைய நிகழ் காலத்தை
தியாகம் செய்பவள்தான் தாய்!.

### கோலம்!
முற்றத்துக் கோலம்
அழகாய் இருந்தது
அப்பா இறந்ததும்
அம்மாவின் கோலத்தை
சகிக்க முடியவில்லையே!.

### தண்ணீர்!
தண்ணீர் இல்லாமல்
அலையும் மக்கள் அங்கே..
தண்ணி அடித்து
தரையில் புரழுபவர்கள்
பலர் இங்கே!..

**வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**

### தனிமை
சில நேரங்களில்
தனிமை மிக அழகானது
யாரையும் காயப்படுத்தாமலும்
யாரிடமும் காயப்படாமலும்
இருக்க வேண்டுமானால் தனிமை
சிறந்தது.

### அண்ணன்
போகும் வழி எல்லாம்
நிழல் போல தொடர்பவன்
நீ ஒருவன்.

**- நந்தனி, இலண்டன்**

### அவளாய் அவள்

திணிப்புகள் வேண்டாமே
அவளுக்கு!
அவளை அவளாக வாழ விடுங்கள்...
அதான் அவளுக்கு பிடிக்கும்...
வர்ணிப்புகளும்
பாராட்டுகளும் மட்டும்
அவளை கொண்டாடுவதில்லை;
அவள் அவளாக வாழ்வதே
அவளுக்கு கொண்டாட்டம்;
அடிப்படை அத்தியாவசிய தேவைகள்
மட்டுமா அவளுக்கு;
அதை தாண்டி அவள் உலகம் பெரிது
அவளுக்கான அவளின் உலகம்..!
சேலையில்
சிறை பிடிக்காதீர்கள் அவளை;
அவளின் உடைகளை அவளே
முடிவு செய்துக்கொள்ளட்டுமே :
அவளுக்கான உலகில்
அவளை வாழ விடுவோம்;
அன்பின் கட்டுப்பாடுகள்
அவளை கட்டிப்போடுவது சரியோ?
அருவெறுக்கிறாள் இவ் வாழ்வை அவள்
அருவெறுக்கிறாள்
அவளுக்கான திணிப்புகளை;
அவளை அவளாய் வாழ விடுவோம்

**- நா.மேனன்**

# அகர கவிக்களம்....

## விரக்தி

விரக்தியின் விளிம்பில்
நிற்பவனுக்கு
இறைவனே நேரில் வந்தாலும்
ஆசைப்பட்டதை கேட்கும்
மனம் இருக்காது

## திருப்தி

யானைக்கு
கரும்பு தோட்டமே தேவைப்படுகிறது
எறும்புக்கு
சக்கையே போதுமானதாக இருக்கிறது
தோட்டம் கிடைக்கும் போது
யானையாய் இரு
சக்கை கிடைக்கும்போது
எறும்பாய் இரு
வாழக்கையில் திருப்பதியில்லை என்ற
பேச்சுக்கே இடமிருக்காது

## தனிமை

எதற்கு என்னோடு நகர்கிறாய் என்று
என் நிழலைக்கேட்டேன்
அதற்கு அது சிரித்துகொண்டே சொன்னது
என்னைத்தவிர உன்னுடன்
யாரும் கடைசிவரை வரப்போவதில்லை.

## நீ

தென்றல் போல் நீ நடந்து வந்து
பூட்டியிருந்து எந்தன்
இதயவாசலை திறந்து
உரிமையோடு என் இதயத்தில்
அமர்ந்து கொண்டாய்
இது அத்துமீறிய செயல்தான்
வழக்கு தொடுக்க முடியும்
இருந்த போதும் உந்தன்
செயலை ரசித்தேன்
இதயத்தில் இடம் தந்தேன்

வலி நிறைந்த புன்னகையையும்..
வலுவிழந்த கண்ணீர்த்
துளிகளையும் சுமந்தவாறே
தன்னைக் கடக்கச்
சொல்கின்றது
இவ்வாழ்க்கை..!

உன்னை விலகி விலத்திச்
செல்கிறார்கள் என்று
கவலை கொள்ளாதே..!
அவர்கள் உன் அருகில்
இருக்க தகுதியற்றவர்கள்
என்று பெருமைகொள்..!

எவ்வொருவரின் அன்பும்
உனக்கு எப்போதும்
நிரந்தரமில்லை..!
வெவ்வேறானவரிடம்
இடமாறும்
தன்மைகொண்டதே
அன்பாகும்..!

மலடியின் மடியில்
மண்டியிட்டு
தூங்குகின்றன..
அவளது பிள்ளைக்கான
ஆயிரமாயிரம்
தாலாட்டுகள்..!

கேட்கும் திறன் இழந்தபின்தான்
கூக்குரலிடுகின்றன
அவள் காதில் சொல்லிய
காதல் கவிதைகள்..!

**- ச.சூட்டி(யாழ்)**

# ஒழித்து விட்டோம் எனக் கொக்கரித்தார்கள்



## உண்மையாகவே ஒழிக்கப்பட்டாரா..?

தமிழினத் தலைவர், மேதகு பிரபாகரனை சிங்கள, இந்திய திராவிட ஆட்சியாளர்கள் ஒட்டு மொத்தத் தமிழினத்தை அழித்தேனும் வெற்றி கொள்ள உதவிய அனைத்து மாற்றுப் போலி போராளிக் குழுக்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பிரபாகரனை ஒழித்து விட்டோம் எனக் கொக்கரித்தார்கள்.

சிலர் அவரது 65ஆவது பிறந்தநாள் விழாவாக, இந்தப் படத்தில் உள்ள விதமாக இணையத்தில் அவர் ஒழிந்தார் என்பதாக வெளியிட்டுக் கேவலப் படுத்தினார்கள். ஆனால், உண்மையோ பொய்யோ அவர் இன்னமும் இருக்கிறார் என்பதற்கான பலமான ஆதாரங்கள், தினமும் வெளி வந்த படியேதான் உள்ளன.



ஆனால் சிங்கள, இந்திய அரசுகளும் அவற்றின் ஏவல் நாய்களும் அவர் இறந்து விட்டார் என்றும், டக்லஸ் தேவானந்தாவின் சாக்கடை மொழியில் சிங்கள இராணுவத்தின் கால்களில் மண்டியிட்ட பின்னர், கேவலமான முறையில் சாகடிக்கப் பட்டார் என்று சொல்வதிலும் பலர் குறிப்பாகச் சம்பந்தன், சுமந்திரன் வகையறாக்கள் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

எத்தனை உலக நாடுகள்? ஏன்? எதற்காக ஈழ விடுதலைப் போரை ஆர்வமாகப் பங்களித்து, ஒரு கேவலமான வெற்றி மூலம் புலிகளின் வீரத்தையும், தமிழரின் பெருங் குணத்தையும் உலகறிய வைத்தனர் என்பதை, உலக சரித்திரத்தில் அழியா இடத்தை பெற்றுத் தந்து நிரூபித்து விட்டார்கள். இந்தப் போரை இந்தியாவுக்காகவே நடத்தினோம். இந்தியாவின் உதவியுடன்தான் போராடி, பிரபாகரனை அழித்தோம் எனப் போரை நடத்தி முடித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல

முறை சொல்லிவிட்டார், சொல்லியும் வருகிறார்.

இராணுவத்திலிருந்து புலிகளுக்குப் பயந்து ஓடி, அமெரிக்காவில் தஞ்சம் புகுந்து, அண்ணன் ஜனாதிபதியாகியப் பின்னர், அண்ணன் மகிந்தவால் பாதுகாப்புச் செயலாளர் பதவி ஏற்றும், பல போர்க் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படும் நிலையில், உயிர் தப்பி வாழும் கோத்த பாயா ராஜபக்ஷவும் இந்தியாவே தமிழின அழிப்பைச் செய்தது, செய்ய உதவியது எனப் பல முறை சொல்லியும் வருகிறார்.

இலங்கை அரசுத் தரப்பாலும், இராணுவத் தரப்பாலும் இந்திய அரசுதான் முதல் குற்றவாளி எனத் திரும்பச் சொல்லப் பட்டாலும், ஈழத் தமிழ் அரசியல்வாதிகளும், அவர்களின் அடிவருடிகள், அடிகழுவிகள் போட்டி விடுதலைக் குழுக்களும் சம்பந்தன், சுமந்திரன் போன்ற கலப்பினப் பிறவிகளும் இந்தக் குற்றச்சாட்டைக் கவனத்தில் எடுக்க மறுக்கிறார்கள், மறைக்கிறார்கள்.

இந்தியாவும், இந்தியக் காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், அன்றைய தமிழக முதல்வர் முத்துவேலர் கருணாநிதியும் அவரின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான திருமாவளவன், வை.கோ., தமிழ் மாநில இந்தியக் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள் போன்றவர்களும் இந்த மாபெரும் இனக் கொலைக் குற்றச்சாட்டை மறுக்காமலும், மறைத்தும் மௌனமாகக் கடந்துவிட முயலுகிறார்கள்.

இவர்களை விட மோசமானவர்களாக இந்தியாவின் கருணைப் பார்வை வேண்டும். அதனால் எப்படியும் இந்தியாவின் தயவால் எள் அளவும் தமிழருக்குப் பயனில்லாத சிங்கள நீதிமன்றத்தால் கொன்று அழிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தையோ வேறு ஏதாவது அரசியல் தீர்வைப் பெற்றுத் தருமாறு, கால்களில் விழுந்து கெஞ்சுவது போல, தமிழ் மக்கள் சார்பாக பழ.நெடுமாறன், காசி ஆனந்தன் போன்றோர் பகிரங்கமாக கெஞ்சுவதன் மூலம் தமிழ் இனத்துக்கே மிகப் பெரும் இழுக்கும், அவமானமும் ஆகும்.

குறிப்பாகப் புறநானூற்று வீர சாதனைகளை உலகம் வியக்க நேற்றுவரை சாதித்து மரணித்த மாவீரர்கள் மற்றும் 2 இலட்சம் மக்களின் உயிர்ப் பலிகள், சொத்துகள், நிலங்கள் எல்லாம் பறிகொடுத்து, சிங்களத்தின் கொத்தடிமைகளாய் தமது தாய் நிலத்தில் அவதி அடைவதைக் கண்ட பின்னரும், இப்படியான கபோதிகளை நாம் எப்படி மன்னிப்பது?

நெடுமாறனையும், காசி ஆனந்தனையும் மன்னித்தாலும் மன்னிக்கலாம். ஆனால் 20 வருடங்களாக ஐ.நா. மனித உரிமை மன்றத்தில், ஈழத் தமிழர் மனித உரிமை பற்றியும் மேதகு தலைவரின் பக்தன் போலப் பேசி வரும், பிரான்ஸ் நாட்டின் மனித உரிமை அமைப்பை நடத்தி வரும் ஐயா க.வி.கிருபாகரன் எழுதியும், பேசியும் நாம் இந்தியாவின் தயவால்தான் எதையும் பெற முடியும். எப்படியும் அதன் தயவைப் பெற வேண்டும். தலைவரும் அப்படித்தான் நினைத்தும், பேசியும் உள்ளார் என வாதாடி வருகிறார். அவருக்குத் தெரியாத அல்லது தெரிந்தும் மறைக்க முயலும் உண்மைகள்



சிலவற்றை இங்கே தேட முற்படுகிறேன். தவறு கண்டால் அவரோ, அவர் சார்பாக யாராகிலும் சரி பதில் சொல்லலாம்.

இந்திய அரசு 20 ஆண்டுகளுக்கும் மேலாக புலிகள் இயக்கத்தைத் தடை செய்து வருகிறது. இந்தியாவின் இரண்டு முதன்மைக் கட்சிகளான இந்திய காங்கிரஸ், பா.ஜ.க. இரண்டுமே மாறி மாறித் தடைகளைப் போட்டு, ஈழத் தமிழினம் உலகில் எங்குமே தனக்கு இளைக்கப்பட்ட இன அழிப்பு போர்க் குற்றங்களுக்கான நீதியைத் தேடிப் பெற முடியாத நிலையில் இன்றும் தாய் மண் பறிப்பு, கலாசார அழிப்பு, அடிப்படை உரிமைகள் மறுப்பு, உயிருக்குப் பாதுகாப்பற்ற அவல நிலையில் தவிக்கிறது. இவற்றுக்கு நாம் யாரிடம் நீதி கேட்பது?

இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யக் காரணம், அவர்கள் ராஜீவ் காந்தியை 1991இல் தற்கொலைதாரியால் படுகொலை செய்யப்பட்டார் என்பதே!. திரு.கிருபாகரன் போன்றோர் இந்தியாவின் இந்தக் குற்றச்சாட்டை உண்மை என ஏற்கிறார்களா? அப்படியாயின் அந்தக் குற்றத்துக்கு முள்ளிவாய்க்கால் இன அழிப்புப் போரும், அதன் பின்னர் அங்கிருந்து அகதிகளாக வெளியேறியவர்களை, முள் கம்பி முகாம்களில் அடைத்து செய்த சித்திரவதைகள், மனித உரிமைகள் சட்டப்படி சரியா?

பின்னர் மன நல முகாம்களை அமைத்து, கொடுக்கப்பட்ட மருந்துகளும், ஊசிகளும் எவை? அவற்றின் தாக்கங்கள் பக்க விளைவுகள், அகால மரணங்கள் பற்றிய விபரங்களை அறிய யார் முற்பட்டார்? பாதிக்கப்பட்ட மக்கள் செய்த குற்றங்கள் என்ன? அவற்றுக்கான நீதியும், விசாரணையும் முறைப்படி நடத்தப்பட மனித உரிமைகள் அமைப்பு என்ன செய்தது? அவற்றின் முடிவுகளை வெளியிடுவார்களா?

காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் தொடர்பாக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கூடவா நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியாது? பிரச்சனை என்னவென்றால், இருப்பவனுக்கும் சரியாக இருக்கத் தெரியாது. சிரைப்பவனும் சரியாகச் சிரைக்க மாட்டான். அதனால் தமிழினம் முழு மொட்டையாகித் தவிக்கிறது. இந்த அழகில் இந்தியாவின் அரசியல்தான் தீர்வு என பஜனை பாடுவதில் மட்டும் குறைச்சல் இல்லை?

எங்களுக்கு 'ஈழத் தமிழர்களுக்கு' மிகப் பெரிய மனக் குழப்பம் என்னவென்றால், எதிரியையும் தெரியாது, நண்பனையும் தெரியாது. அதனால் இரண்டின் குழப்பம்தான் 30 வருட அறவழிப் போராட்டம் தோல்வியைக் கண்டது. 36 வருட ஆயுதப் போராட்ட வெற்றியால் பெற்ற தமிழரின் அரசையும், 50,000 மாவீரின் தியாகத்தையும் 2 இலட்சம் வரையான அப்பாவித் தமிழரின் உயிர்கள், உடைமைகள், சொத்தையும் இழந்து, உலக சமுதாயத்தில் அம்மணமாக நிற்கிறோம்.

இனியாவது நமது எதிரிகளையும், துரோகிகளையும் நாம் சரியாக அடையாளம் கண்டு, மோத வேண்டியவர்களிடம் மோதியும், ஒதுக்க வேண்டியவர்களை ஒதுக்கியும், எம்மை நாமே தற்காத்துக் கொள்ள வேண்டும்.

எங்களின் இனத் துரோகிகள் யார்? என்பதை கடந்த 70 வருடகால அரசியல் வரலாறு காட்டி விட்டது. இக்கால கட்டத்தில் உண்மையான தமிழரின் தலைவர்கள் கொல்லப்பட்டும், மரணித்தும், துரோகக் கும்பலால் படுகொலை செய்யப்பட்டும் விட்டார்கள். அப்படி; கொல்லப்பட்ட மட்டு நகர் யோசப் பரராசசிங்கம், மூதூர் தங்கத்துரை, யாழ் ரவி ராஜ், சிவ மகாராசா, குமார் பொன்னம்பலம், தராகி சிவராம், ஆ.தியாகராஜா, அருளம்பலம் போன்றவர்கள் தமிழ் இனத்தின் இழப்புகளாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள்.

இன்று அரசியல் செயயும் முன்னாள் போராளிக் குழுக்களின் தலைவர்களும் சம்பந்தன், சுமந்திரன், டக்லஸ், கருணா, பிள்ளையான் போன்றவர்களும் தமிழினத்தின எதிரிகள் அல்லது துரோகிகளே!. இவர்களைத் தமிழ் மக்கள் அரசியல் அரங்கில் இருந்து தூக்கி எறிவதால் மட்டுமே தன்னைக் காத்துக் கொள்ள முடியும்.

'தலைவர் வருகிறார்!' என்கிற செய்தி, காட்டுத் தீ போல இந்தியாவிலும், இலங்கையிலும், இணையத் தளங்களிலும் கொழுந்து விட்டு பிரகாசித்து, உலகத் தமிழர் மத்தியில் எரிகிறது. அவை எல்லாம் உண்மையாகி, கண்முன்னே வரும் நாளைப் பார்த்துக் காத்திருப்போம்.

**(அடுத்த இதழில் இன்னும் வரும்)**

# யேர்மனியில் திருவள்ளுவர் சிலை




மிகவிரைவில் யேர்மனியில் திருவள்ளுவர் சிலை அமைய இருக்கிறது. யேர்மனியில் தமிழர்களின் 40திற்கும் மேற்பட்ட கடைகளும், நிறுவனங்களும் அமைந்துள்ள டோட்முண்ட் நகரின் ***RhenischeStr*** வீதியில் இச்சிலை அமைய இருக்கிறது. டோட்முண்டின் முதன்மை தொடருந்து நிலையத்திறகும் மிக அருகிலும், டோட்முண்டின் மையப் பகுதியுடன் இணைந்தும் இவ்வீதி அமைந்திருக்கிறது. தமிழர்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் தினமும் பயன்படுத்தும் ஒரு வீதியாக இது விளங்குகின்றது.

'தமிழர்களின் வீதி' என்று வர்ணிக்கப்படும் இவ்வீதியிலேயே திருவள்ளுவர் சிலை அமைய இருக்கிறது. இதற்கான முயற்சிகள் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவே நடைபெற்று வந்தன. தற்பொழுது சிலையைச் செய்வதற்கான வேலைகள் ஆரம்பித்திருக்கின்றன. டோட்முண்டில் நடைபெறுகின்ற தமிழர் தெரு விழாவை ஒருங்கிணைக்கின்ற தமிழர்அரங்கம் அமைப்பே திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கான முயற்சிகளையும், தமிழ் அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் என்று பலருடைய துணையுடன் முன்னெடுத்திருந்திருக்கிறது.

திருவள்ளுவர் சிலையை யேர்மன் நாட்டைச் சேர்ந்த கத்தரீனா பொக் என்கின்ற சிற்பி ஒருவரே செய்கின்றார். அலுவலகச் செயற்பாடுகளை இலகுவாக்குவதோடு, யேர்மனிய சிற்பி ஒருவர் திருவள்ளுவர் சிலையைச் செதுக்குவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்கின்ற அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அத்திவாரம் தொடக்கம், சிலை அமைவதற்கான பீடம் உருவாக்குவது வரை ஏற்படுகின்ற செலவுகளை டோட்முண்ட் ***Innenwest*** நகரசபை பொறுப்பெடுக்க முன்வந்திருக்கிறது. அதேவேளை திருவள்ளுவர் சிலை உருவாக்கம், சிலையைக் கொண்டு வருவது, பொருத்துவது, திருவள்ளுவர் குறித்தத் தகவல்களைப் பீடத்தில் பொறிப்பது போன்ற செலவுகளை ஏற்பாட்டாளர்கள் பொறுப்பெடுத்தல் வேண்டும் என்று டோட்முண்ட் நகர சபை பணித்திருக்கிறது.

இதற்கு இருபதாயிரம் யூரோக்கள் வரை செலவாகும் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. திருவள்ளுவர் சிலை அமைப்பது தொடர்பாக பல்வேறு தமிழ் அமைப்புச் சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றவர்கள் கூடி ஆராய்ந்த பொழுது, இந்த இருபதாயிரம் யூரோக்களை, சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல், தமிழ் மக்களிடம் இருந்து சேகரிப்பதே பொருத்தமானது என்று முடிவெடுக்கப் பட்டிருக்கிறது.

திருவள்ளுவர் சிலை என்பது குறிப்பிட்ட சிலரால் அமைக்கப்பட்டது என்பது போல் இல்லாது எல்லோரும் பங்களித்து சிலை அமைக்கப்படுவதே திருவள்ளுவருக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும் என்றும், அக் கூட்டத்தில் கருத்துரைக்கப்பட்டது.

ஆகவே, உங்களால் முடிந்த பங்களிப்பை தருதல் வேண்டும் என்று உலகத் தமிழர்களிடம் கோரிக்கை வைக்கின்றோம். இவ் வங்கி இலக்கத்திற்கு உங்கள் பங்களிப்பை அனுப்பி வையுங்கள். ***Paypal*** ஊடாகவும் பணம் அனுப்ப முடியும்.

**Verein fuer tamilische Kuenstler e.V.**
**Volks Bank Dortmund Nord West**
**DE09 4406 0122 4086 4321 00**

**Paypal : paypalme/valluvar2023**



இலட்சுமணன்

# கருத்துகளுக்குள் அகப்பட்டு அல்லல்படும் காணாமலாக்கப்பட்டோர்



காணாமலாக்கப்பட்டோர், போரில் கொல்லப்பட்ட மற்றும் இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த போராளிகள் தொடர்பில் வெளியிடப்படும் தகவல்கள், தமிழ் மக்கள் மத்தியில் பல குழப்பங்களைத் தோற்றுவிப்பதும், அது சிறிது காலத்தின் பின்னர் மறைந்து போவதும் சாதாரணமாகிவிட்டது. இதற்கொப்பானதொரு சம்பவம் மட்டக்களப்பில் கடந்த மாதத்தில் அரங்கேறியிருந்தது.

காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரும் போராட்டம் குறித்து, எங்களுடைய பிள்ளைகளை நாங்கள் தாய் நாட்டுக்காகக் கொடுத்து விட்டு, இன்று எங்களுடைய பிள்ளைகளைக் காணவில்லை என்று வெளிநாடுகளில் விலை பேசுகின்றோம். அதை வைத்துப் போலி அரசியல் கூடச் செய்கின்றார்கள். நடந்து முடிந்த யுத்தத்தை வைத்து வியாபாரம் செய்வது, ஒரு இழுக்கான விடயம் என்று சர்வ மக்கள் கட்சியின் தலைவி தயாபரராஜ் உதயகலா மட்டக்களப்பில் கடந்த மாதம் நடத்திய ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்டிருந்தமையானது, காணாமலாக்கப்பட்டோர் மத்தியில் பெரும் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது.

எங்களுக்குத் தேவையான ஒரே ஒரு விடயம் நீதி. யார் தவறு செய்திருந்தாலும், அதற்கான நியாயம் கிடைக்க வேண்டும். காணாமல் போனோர் என்ற விடயத்தை வைத்து, போலிப் பிரச்சாரங்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். காணாமல் போனோர் தொடர்பான போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களைக் கூட எனக்கு நன்றாகத் தெரியும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து போராட்டத்தில் இறந்திருந்தும் கூட, அவர்கள் புலிகள் அமைப்பில் இருக்கும் போதுதான் இறந்தார்கள் என்ற விடயம் அவர்களுக்குத் தெரிந்திருந்தும், காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்கு மறு கருத்தாக, “தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டதையும், அழிக்கப்பட்டதையும் சர்வதேசமே இன்று கூறுகிறது. ஜெனிவாவில் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உதயகலாவின் கருத்துகளுக்கு அனைத்து மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பில், எமது கடுமையான கண்டனத்தைத்

தெரிவிக்கிறோம். அவர் தெரிவித்த அப்பட்டமான பொய்களுக்கு, உடனடியாக அனைத்து மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று உதயகலா தெரிவித்த கருத்துகளுக்கு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

அதே நேரத்தில் "வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அனைவரும் இறுதி யுத்தத்தில் இறந்து விட்டதாகவும், அவர்கள் அனைவரும் முன்னாள் போராளிகள் எனவும் அப்பட்டமான ஒரு பொய்யை உதயகலா கூறி இருக்கின்றார். சரணடைந்த, இராணுவத்தால் இழுத்து செல்லப்பட்ட எமது பிள்ளைகள், எமது மக்கள், எமது பெண்கள் எங்கே? எனக் கேட்டு நிற்கிறோம். எங்களது உறவுகளைத் தொலைத்து நிற்கின்ற வலியைப் பற்றி இந்த உதயகலாவிற்கு என்ன தெரியும்?" இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான யுத்தம், மிகக் கடுமையாக அடக்கப் பட்டதனால், மௌனமாகி 14 வருடங்கள் நிறைவு பெறுகிறது. ஆனால், இன்னமும் நம்முடைய தமிழ் மக்கள் சர்வதேச சமூகம், ஐக்கிய நாடுகள் சபை தமக்குரிய நீதியை வழங்குவார்கள் என்ற ஏக்கத்துடனான எதிர்பார்ப்புடனேயே இருந்து வருகின்றனர்.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் ஏன்? என்பதற்கான கேள்வியே இப்போதைக்கு சாதாரணமானதாகி விட்டது. அதே போன்றுதான் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கைகளும் இருந்து விடுகின்றன. மிகக் கடுமையான அறிக்கை ஒன்றினை பேரவையின் ஆரம்பத்தில் விடுவதும், இறுதியில் தீர்மானங்கள் பிசுபிசுத்துப் போவதும் நடந்து கொண்டிருக்கின்றது.

இலங்கைக்கு எதிராக 2015ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையினால் பிரித்தானியாவின் ஆதரவுடன், அமெரிக்காவால் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் நீதிமன்றம் ஒன்றை அமைத்து, விசாரணைகளை நடத்த வேண்டும் என்பதே அத்தீர்மானம்.

நல்லிணக்கத்தை மேம்படுத்துதல், பொறுப்புக்கூறல், மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான அலுவலகமொன்றினை நிறுவுதல், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள நிகழாமைக்கான ஆணைக்குழு நிறுவுதல், நீதிக்கான பொறிமுறை, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை நிறுவுதல் ஆகிய நான்கு முக்கிய விடயங்களை உள்ளடக்கிய 25 தீர்மானங்கள் இதில் அடங்கும். இந்தத் தீர்மானம் நல்லாட்சி எனப்படும் பிரதமர் ரணில் - ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேறியது.

அவர்கள் ஏதோ கொஞ்சமேனும் செய்து கொண்டிருக்கையில் நல்லாட்சிக்குள் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இருந்த பனிப்போர் குழப்பத்தை ஏற்படுத்தியது. அதனையடுத்து, 2009 மே 19ல் முள்ளிவாய்க்காலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருகையில், பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய கோட்டபாய ராஜபக்ச 2019 ஆண்டு நவம்பரில் இலங்கையின்



ஜனாதிபதியானார். அதனையடுத்து 2020 பெப்ரவரியில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்திலிருந்து தாம் வெளியேறுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. நல்லாட்சி அரசு தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியமை பெரிய தவறு எனச் சுட்டிக்காட்டியதுடன், வெளிநாட்டு நீதிபதிகள் குழு விசாரணை செய்ய முடியாது என்றும், கடந்த அரசாங்கம் தெரிவித்தது.

இதிலிருந்து விலகிய அரசாங்கம் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு மாறாக, தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளிலேயே தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருந்தது.

ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ராஜபக்ச குடும்பத்தின் கடுமை, நல்லாட்சி என்ற அரசாங்கம் உருவாக்கப் பட்டு, இல்லாமல் செய்யப்பட்டாலும், மீண்டும் ஈஸ்ரர் தாக்குதலையடுத்து சிங்கள பெரும்பான்மை மக்களின் மனங்களில் ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாத அச்சத்தின் ஊடாக நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது.

மனித உரிமை தினம், காணாமலாக்கப் பட்டோருக்கான தினம் என்றெல்லாம் உரிமைகள் ஞாபகப்படுத்தப் பட்டாலும், எதுவும் நடைபெறாத ஒரு நாடாக இலங்கை இருந்து வருகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், கால்நடைகளின் மேச்சற்தரை பிரச்சினை, இயற்கை வளங்களை சூறையாடுதல், வன வளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் காணி பகிர்ந்தளிப்பு, காணாமலாக்கப் பட்டோர் விடயம், மனித உரிமை மீறல்கள், ஜெனிவா தொடர்பான தீர்மானம், தொல்பொருள் ஆராய்ச்சி என்னும் போர்வையில் சிங்கள மயமாக்கல், மதவழிபாட்டுக்குத் தடை விதித்தல், பௌத்த விகாரை அமைத்தல் போன்ற செயற்பாடுகள் திட்டமிட்டவாறு விரைவாகவும், சிறப்பாகவும் நடைபெறுகின்றன.

தமிழர்கள் அரசிடம் சரணாகதியடைந்து, உரிமைகளைத் துறந்து, நடந்தவைகளை மறந்து, நடப்பவைகளை காணாது வாழப் பழகிக்கொள்ளல் இந் நாட்டில் சிறப்பானதொரு வாழ்க்கைக்கான வழி என்பதே சிங்கள அரசுகளின் எண்ணமாக இருக்கிறது. இந்தச் சிங்கள இனவாத அரசின் போக்கைக் கைவிட்டு விட்டு, தமிழர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும் என்பது தமிழர்களது எண்ணம். அதனை விடவும் அரசாங்கம் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதும் கூட. அது நடைபெறுமா? என்பது வெறும் எதிர்பார்ப்பே!.

தமிழர்களுடைய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக இருக்கின்ற காணாமலாக்கப் பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றாலும், 1956களிலிருந்தே திட்டமிட்டு இன அழிப்பைச் செய்து கொண்டு தமிழர்களுக்கெதிராகத் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தும் நிலையில், நாம் இலங்கையின் நீதியை எதிர்பார்க்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே!. இப்போது ஜனாதிபதி ரணிலின் சில நகர்வுகள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாமா? என்பதுவும் சந்தேகமே!.






ஜேர்மனி - வூப்பெற்றால் அருள்மிகு

# ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயம்


**Arulmiku Sri Navathurgadevi Tempel e.V**

**Hünefeldstrasse 63b, 42285 Wuppertal, Tel: 0202 4796017**


## மஹோற்ஸவ விஞ்ஞாபனம் 12.05.2023 - 23.05.2023

அம்பிகை அடியார்களே!

உலகனைத்திற்கும் தாயாக விளங்கும் ஆதிபராசக்தியாகிய தேவி, நவசக்திகளையும் உள்ளடக்கி நவதுர்க்கா என்னும் நாமத்துடன் ஜேர்மனி வூப்பெற்றால் நகரில் குடிகொண்டுள்ளாள். மனமுருகி வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளும் அம்பிகைக்கு இவ்வருட மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் சோபகிருது ஹூ சித்திரை மீஷம் நாள் (ஆங்கில வருடம் 12.05.2023) வெள்ளிக் கிழமை அட்டமி திதியும் திருவோண நட்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி, 20.05.2023 (சனிக்கிழமை) தேர் உற்சவமும், 21.05.2023 (ஞாயிறுக் கிழமை) தீர்த்தோற்சவமும், 22.05.2023 (திங்கட் கிழமை மாலை) பூங்காவனமும், 23.05.2023 (செவ்வாய்க் கிழமை மாலை) வைரவர் மடையுடன் விழா இனிதே நிறைவு பெறும். ஐந்தொழில்களையும் குறிக்கும் இப்பெருவிழாவில் அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து அம்பிகையைத் தரிசித்து, தாம் விரும்பிய நற்பேறுகளைப் பெற்று நலமுடன் நீடூழி வாழ்வார்களாக. நேரில் வரமுடியாதவர்களும் அம்பிகையை நினைந்து விரதமேற்றுத் துதி செய்து வழிபடுவதன் மூலம் நற்பலன்களை பெற்று நீடூழி வாழ அம்பிகை அருள் பாலிப்பாள்.

### கிரியா கால நிகழ்வுகள் காலை, மாலை

| | |
|---|---|
| அபிஷேகம், பூஜை | பூஜை |
| ஸ்தம்ப (கொடி மரம்) பூஜை | ஸ்தம்ப (கொடி மரம்) பூஜை |
| வஸந்த மண்டப பூஜை, வீதியுலா | வஸந்த மண்டப பூஜை, வீதியுலா |
| விபூதி பிரசாதம், அன்னதானம் | விபூதி பிரசாதம் |

| மேலும் விவரங்களுக்கு | ஆலய நிர்வாகம் | ஜெயானந்தன் | ஜெயம் | அமரன் |
|---|---|---|---|---|
| | 0202 4796017 | 0202 7581924 | 0202 733905 | 01731833664 |

| | |
|---|---|
| 11.05.2023 வியாழன் | சாந்தி (மாலை 05.00 மணி) மகோற்சவ பூர்வாங்க கிரிகைகள் |
| 12.05.2023 வெள்ளி | 1ம் திருவிழா (காலை 08.00 -11.00 மணிக்கு) கொடியேற்று விழா |
| 13.05.2023 சனி | 2ம் திருவிழா (கற்பகதருக் காட்சி |
| 14.05.2023 ஞாயிறு | 3ம் திருவிழா (முப்பெருந்தேவியர் திருக்காட்சி) |
| 15.05.2023 திங்கள் | 4ம் திருவிழா (ஸ்ரீ சக்கர பூசை) |
| 16.05.2023 செவ்வாய் | 5ம் திருவிழா (தேசிக்காய் விளக்குப் பூசை) (மாலை) |
| 17.05.2023 புதன் | 6ம் திருவிழா (கைலாசவாகனக் காட்சி) |
| 18.05.2023 வியாழன் | 7ம் திருவிழா (மாவிளக்குப் பூஜை) |
| 19.05.2023 வெள்ளி | 8ம் திருவிழா (மாலை வேட்டைத் திருவிழா) |
| 20.05.2023 சனி | 9ம் திருவிழா (தேர் திருவிழா) |
| 21.05.2023 ஞாயிறு | 10ம் திருவிழா (தீத்த திருவிழா) |
| 22.05.2023 திங்கள் | 11ம் திருவிழா (பூங்காவனம் மாலை) |
| 23.05.2023 செவ்வாய் | வைரவர் பொங்கல் மடை, வடை மாலை பூஜை |

**தினமும் காலை 108 சங்கு கொண்டு ஸ்ரீ நவதுர்க்காதேவி அம்பிகைக்கு அபிஷேகம் நடைபெறும் தினமும் மாலை சைவசமய சிறப்புரை இடம் பெறும்.**

**அன்புச் செல்வன்**



13என்றால் உலகமே பயத்தில் நடுங்க வைக்கும் எண். இது மூட நம்பிக்கை எனப் புறந்தள்ளப் பல புத்திஜீவிகளும், போலிப் பகுத்தறிவுவாதிகளும் எப்பொழுதும் தயாராக உள்ளனர். ஆனால், ஈழத் தமிழ் மக்களின அரசியல் வரலாற்றைப் பொறுத்த வரை தமிழ் மக்கள், சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் பயங்கர தமிழ் இன அடக்கு முறைகளின் அரசியல் தீர்வாக இரு அரசுத் தலைவர்களும் சொல்லிக் கொண்டனர்.

ராஜீவ் காந்தியின் வருகை, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு காண்பதற்காகவே என சொல்லப் பட்டது. ஆனால் இலங்கைஅரசுத் தலைவர், அதனை ஒரு அந்நிய நாட்டுப் படை எடுப்பாகப் பார்த்தார். சாதாரண சிங்கள மக்களும், படை அணிவகுப்பில் ராஜீவ் காந்தியைப் பின்புறமாகத் துப்பாக்கிப் பிடியால் தாக்கிய இலங்கையின் கடற்படைச் சிப்பாயும் அப்படித்தான் பார்த்தார் . அதற்கு உயிர் தப்பியதால் 2009 ஈழத் தமிழ் மக்களையும், அவர்களின் அரசியல் எதிர்காலத்தையும் இன அழிப்பின் மூலம் அதே இந்தியா நடத்தி முடித்தது.

**கச்சை தீவில் புத்த கொடி !**

1980 தொடக்கம், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை மீதான அமெரிக்க அரசின் தலையீட்டைத் தடுக்க, இலங்கை தமிழர் இளைஞர்களை ஆயுதக் கிளர்ச்சியில் பயிற்சியும், ஆயுதங்களும் கொடுத்து இலங்கைப் பாதுகாப்புப் படைகள் மீதான தாக்குதல்களை ஊக்குவித்து, இலங்கை அரசைப் பணிய வைக்க முயன்றது. அதன் காரணமாக 1983இல் விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய கரந்தடி (கெரில்லா) தாக்குதலால் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அவர்களின் சடலங்களை எடுத்துச் சென்ற சிங்கள அரசு, கொழும்பு கணத்தை மயானத்தில் எரியூட்டிய சடங்கில், தமிழ் மக்கள் மீதான திட்ட மிட்ட வன்முறைகளை நடத்தி, பெரிய அளவில் இனக் கலவரத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமை அரசு நாடெங்கிலும் நடத்தியது. இவற்றின் பின்னணயில் அமெரிக்க, இந்திய, ரஷிய அரசுகளின் தேவைகளும், நலன்களும் பூகோள அரசியல் என்கிற வட்டகைக்குள் பிராந்திய அரசுகளான சீனா, பாகிஸ்தான் நாடுகளின் அரசுகளும் இருந்தன என்பதனைப் பின்னாளில் நடந்த போர்களால் அறிய முடிந்தது.

# எங்களின் தாயக மண்ணை நாமே மீட்போம்



1987இல் ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தம், ஒரு இந்திய அரசின் இராணுவத் தலையீடு எனச் சிங்கள மக்கள் தென் இலங்கையில் மிகப்பெரிய போராட்டங்கள் நடத்தினர். அவற்றை அடக்க இலங்கை இராணுவத்தைப் பயன்படுத்த வசதியாக, ராஜீவ் காந்தி செய்த உடன்படிக்கைப் படி இலங்கை வந்த இந்திய அமைதி காக்கும் படை என்கிற பெயரில் இலங்கைத் தமிழரின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இறக்கப்பட்டது.

இந்த மாகாணங்கள் தமிழ் பேசும் இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்துசமய மக்களின் பூர்வீகத் தாயகப் பகுதிகளாகும். இந்த மக்கள்தான் சிங்களத்தால் பறிக்கப்பட்ட அரசியல் பொருளாதார மொழி உரிமைகளுக்காகச் சிங்கள அரசுகளை எதிர்த்துப் போராடிய மக்கள்.

இந்திய அமைதி காக்கும் படை என வந்திறங்கிய இந்தியப் படைகள், அமைதி காப்பதாகச் சிங்கள அரசின் இராணுவ வல்லாதிக்க நோக்கங்களை நிறைவு செய்யும், சிங்கள அரசின் இராணுவ அடக்கு முறை படையாக மாறியது. அரசியல் விடுதலைக்காகப் போராடிய குழுக்களை அழிக்கவும், அவற்றை ஒன்றுடன் மற்றதை மோத வைத்து, அழிப்பு வேலைகளைச் செய்யவும் இந்திய அமைதிகாப்புப் படை பயன்பட்டது.

ஈழத் தமிழ் மக்களைக் காப்பதாகக் கூறி வந்த இந்தியப்படை, ‘வேலியே பயிரை அழிப்பது போல’ இந்திய அமைதி காக்கும் படை, கொலைகாரப் படையாக மாறி, தமிழ் மக்களைக் கொன்றும், சிங்கள அரசுக்கு ஆதரவாகவும் செயற்பட்டது.

பல மனிதப் படுகொலைகளைத் தமிழர் பகுதிகளில் செய்ததோடு, அறிவிக்கப்படாத இராணுவ தாக்குதல்களை நடத்தி, பல மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றங்களையும் விமான கடற்படை, கனரகத் துப்பாக்கி, எறிகணை பீரங்கித் தாக்குதல்களையும் அப்பாவிப் பொது மக்கள் வாழும் பகுதிகளில் கண் மூடித்தனமாகத் தாக்கி படு காயங்களையும், மரணங்களையும் ஏற்படுத்தியது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1987இல் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனாவை, சட்டப்படி இலங்கை மீது இந்தியாவின் இராணுவத் தலையீட்டை உறுதிப்படுத்த செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஈழத் தமிழரின் அரசியல் உரிமைக்கான தீர்வாக 13ஆவது






திருத்தம் இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. இந்த 13ஆவது திருத்தம், சிங்கள அரசுகளால் 1948 முதல் மறுக்கப் பட்ட ஈழத் தமிழரின் அரசியல் உரிமைகளை மீளவும், சிங்கள அரசுகளே கட்டுப்படுத்த வழி செய்கிறது.

30 வருடங்களாக அறவழிப் போராட்டம் நடத்தியும், தோற்றுவிட்ட நிலையை இந்திய அரசு ஈழத் தமிழருக்கு உதவுவாதாக ஒரு இராணுவத் தலையீட்டை நடத்தி, தன் இராணுவப் பொருளாதார நலன்களை உறுதி செய்ய 13ஆவது திருத்தம் புகுத்தப் பட்டது. எனவே, எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஏற்கத் தயங்கியும், புலிகள் இயக்கம் ஆயுத முனையில் இலங்கை இந்திய அரசுகளை எதிர்த்துப் போராடிய ஒரு அரசியல் சட்டத்தை, இன்று மீண்டும் வேண்டும் எனக் கேட்கும் கோமாளி அரசியலை எங்கள் தலைவர்கள் நடத்த நினைக்கிறார்கள்.

ஆனால், நல்வாய்ப்பாக சிங்கள அரசியல்வாதிகளும், பொது மக்களும், புத்த பிக்குகளும் மிகக் கடுமையாக எதிர்த்துப் போராடி வருவதால் 13 சனியன் தமிழ் மக்களைத் தொடவே தொட முடியாத நிலைதான் உள்ளது. அத்துடன் இந்தச் சட்டத்தை ஏற்கனவே உச்சநீதிமன்றம் சட்டப்படியான கருமாதியைச் செய்து முடித்து விட்டது.

எனவே பொய்யாக ரணில் விக்கிரமசிங்க ஒரு அரசியல் தீர்வைத் தமிழ் மக்களுக்கு இதன் அடிப்படையில் தருவதாகக் கூறிக் கொண்டாலும், அது தான் போக மாட்டாத மூஞ்சூறு விளக்குமாத்தைக் கொண்டு போன கதையாக ஒரு தொகுதியில் கூடத் தெரிவாகாத ரணில், ஒட்டு மொத்த நாட்டையும் சுமந்து காப்பாற்றுவார் என நினைப்பவர்கள், ஏமாறும் காலம் தொலைவில் இல்லை என்பதை அறிய, அடுத்த தேர்தல் முடிவுகள் காட்டி விடும். அதுவரை அவர் கழுதைமீது தனது பயணத்தைத் தொடரட்டும்.

## ரணிலின் உண்மை முகம்

இப்பொழுது அவருக்குப் பயணப்பட அமெரிக்கா என்கிற கழுதை பல வருட காத்திருப்பின் பின்னர் கிடைச்சிருக்கு. சிங்களவர்கள் எல்லாக் காலங்களிலும் வந்திறங்கி, வெளி நாட்டுக்காரர்களுக்குச் சிவப்புப் பட்டுக் கம்பள வரவேற்புக் கொடுத்து நாட்டையும், தங்களையும் அந்நியரின் அடிமைகளாகி, சக இனங்கள் மீது அதிகாரம் செலுத்துவது வழமையான சங்கதிதான்.

தமிழனை அடக்க முடியாமல், உலக நாடுகளை எல்லாம் இழுத்து வந்து இன்று அமெரிக்கா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், ரஷியா, ஈராக் என எல்லா நாடுகளின் ஏவல் நாயாகச் சிங்களம் தன்னை ஆக்கி வைத்திருக்கிறது. தமிழினம் தனிநாடு கண்டு, தன் தாய் நிலத்தை மீள அமைத்தாலும் அமைக்கலாம். அதற்குத் தேவைக்கு அதிகமான தெம்பும், திராணியும், உழைக்கும் ஆற்றலும் தமிழ் இனத்தின் ஆன்மாவில் தேவைக்கு அதிகமாகவே என்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது.

ஆனால், தமிழ் இனத்திடம் உள்ள ஒரு குறை, ஒற்றுமை இன்மையும், துரோகிகளின் காட்டிக் கொடுப்புகளுமே!. துரோகிகளை இல்லாமல் செய்ய, நாம் அவர்களின் துரோகத் தனங்களை ஈவு இரக்கம் காட்டாமல் பகிரங்கப்படுத்தி, அவர்கள் போட்டுக் கொண்டிருக்கும் போலி வேடங்களை அம்பலப் படுத்துவதும்தான். அந்த அரிய பணியைத் தமிழ் இனத்தின் அரசியல் விடுதலையை விரும்பும் எவரும் தயை தாட்சண்யம் காட்டாமலும், நட்பு உறவு என்பவற்றைப் பாராமலும் செயற்படும் ஆற்றல் மனத்திடம் எங்கள் ஒவ்வொருவரிடத்தும் வெளிப்பட வேண்டும்.

தனித் தமிழ் ஈழம் ஒன்றே தமிழரின் தீராத தாகம்.

V BOX










SWISS DISTRIBUTOR

IMPOrtas
International Foods & Beverages

ZURICH 043 343 03 55
BERN 031 951 24 44
www.importas.ch

GERMANY : +19 1514 6978484 | ITALY : 00393510257812 | SWISS : 0041779633259

## சிறுகதை

சபீனா சோமசுந்தரம்

அந்தக் காட்டுப் பாதையின் இருளைக் கிழித்துக் கொண்டு, தூரத்தில் ஒரு மெல்லிய வெளிச்சம் தெரிந்தது. பைக் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. வேகமாக வந்து பைக்கை சரேலென பிரேக் போட்டு நிறுத்தினான் அகிலன்.

பைக்கை நிறுத்தி, ஹெல்மெட்டைக் கழற்றி, சீட்டில் வைத்துவிட்டு, தலையைக் கோதியபடி யோசித்தான். அகிலன் பைக்கை நிறுத்தியதும், பின்னாலிருந்த அவனது நண்பன் ரஞ்சித் பைக்கிலிருந்து இறங்கி, ஒருவித குற்ற உணர்வோடு நண்பனை பார்த்தான்.

"ச் சேக்.. மிஸ் பண்ணிட்டம்டா.. இப்ப என்ன செய்யிறது..?" என்று பைக் சீட்டில் கையை முறுக்கிக் குத்தியபடி சொன்னான் அகிலன்.

"பேசாம நாம போய்டுவம்டா மச்சான்.. இது நமக்கு தேவையில்லாத வேலை போல.. அதான கடவுளா பாத்து இப்படி செய்திட்டார்.." என்றான் ரஞ்சித்.

"எல்லாம் உன்னால தான்டா.. இப்ப எனக்கு இப்பிடியே போக மனசில்ல.. கொஞ்சம் பொறு யோசிப்பம்.." என்று சொல்லி அகிலன் வந்த வேலையை முடித்தே ஆக வேண்டுமெனப் பிடிவாதமாக இருந்தான்.

இருவரும் நின்று யோசித்துக் கொண்டிருக்கையில் எதிர்திசையிலிருந்து தூரத்தில் விட்டு விட்டு எரிந்தபடி வெளிச்சம் ஒன்று அவர்களை நோக்கி வந்தது.

பைக்கில் லைட் அடித்து காட்டியபடி ஒருவன் வந்து, அவர்கள் முன் பைக்கை நிறுத்தினான்.

வந்தவன் ஹெல்மெட் கண்ணாடியை உயர்த்தி "என்ன பொஸ் ஏதும் பிரச்சினையா..? இவடத்த நிக்கிறீங்க..?" என்றான்.

"ஆ.. இல்ல ஒரு பிரச்சினையும் இல்ல.. லோங் டிராவலிங்.. அதான் சும்மா ரெஸ்ட்க்கு நிப்பாட்டி இருக்கம்.." என்றான் அகிலன்.

"ஓ.. நான் பைக் ஏதும் பிரச்சினையோ என்டு நினைச்சுதான் நிப்பாட்டினன்.. சரி பாத்துப் போங்க.. கொஞ்ச தூரத்தில டிராபிக் பொலிஸ் நிக்கிறான்.. வழக்கமா அவடத்த நிக்கிறவங்கள் தான்.. இனி தெரியாதா வேற டிஸ்ரிக் வாகனம் எண்டா நிப்பாட்டி ஒரு ஆயிரம் ஐநூறு கழட்டாம விடமாட்டாங்கள்.." என்று சொல்லி புன்னகைத்துவிட்டு அவன் பைக்கை முறுக்கி கொண்டு கிளம்பினான் தன்வழியில்.

"மச்சான் இப்ப என்னடா செய்வம்.." என்றான் ரஞ்சித்

தாடையைத் தடவியபடி யோசித்த அகிலன் திடீரென்று ஏதோ தோன்றியவனாய்

"டேய் அவங்கள் இந்த அரை கிலோ மீற்றர் தூரத்துக்குள்ள தான் எங்கயோ இருக்கிறாங்கள்.." என்றான்

"எப்பிடிடா சொல்ற.."

"இப்ப வந்தவன் சொன்னத கேட்டியா..?"

"ஓம்.. அவடத்த டிராபிக்காரன் நிக்கிறான் என்டு சொல்லிட்டு போறான.. அதுக்கு என்னடா..?"



“இன்னொன்டும் சொன்னானே.. கவனிச்சியா..?”

“ம்ம்.. இல்லையேடா.. வேற ஒன்டும் சொன்ன மாதிரி தெரியலடா..”

“டேய்.. உனக்கு மூளை இருந்தா தானே.. டிராபிக் பொலிஸ் வழக்கமா அவடத்த நிக்கிறவங்கள் என்டு சொன்னவன்டா கவனிச்சியா..?”

“ஓமடா.. அதுக்கு..?” என்று குழம்பினான் ரஞ்சித்.

“டேய் இந்த ஊர்க்காரனுக்கு டிராபிக் பொலிஸ் இரவில அவடத்த நிப்பான் எண்டு நல்லா தெரியும்.. அப்ப அவனுகள் இதுக்கு அங்கால போயிருந்தா பொலிஸ்ட மாட்டுவாங்கள் எண்டு தெரியும்.. சோ.. இதுக்கு அங்கால போயிருக்க மாட்டாங்கள்..”

“இவடத்த இருந்து ஒரு அரை கிலோ மீற்றர் தூரத்துக் முன்னுக்கு தான் நாம அவங்கள மிஸ் பண்ணினம்.. அப்ப இந்த இடையில இருக்க காட்டுக்குள்ள எங்கயோ தான் அவங்கள் போயிருக்கனும்..” என்று சொல்லி விட்டு அவசரமாக ஹெல்மெட்டை எடுத்து மாட்டிக் கொண்டு பைக்கை ஸ்டார்ட் பண்ணினான் அகிலன்.

ரஞ்சித் யோசித்துக் கொண்டு நிற்கவும் “டேய்.. ஏறுடா குயிக்கா.. நாம லேட் பண்ண ஏலா..” என்று நண்பனை அவசரப்படுத்தினான்.

ரஞ்சித் பின்னால் ஏறிக்கொண்டான்.

அகிலன் பைக்கை வந்தவழியே திருப்பி முறுக்கினான்.

அவன் சந்தேகப்படும் அந்த குறிப்பிட்ட தூரப்பகுதியில் ஆராய்ந்து கொண்டே பைக்கை மெதுவாக ஓட்டினான் அகிலன்.

இரண்டு பக்கமும் அடர்த்தியான மரங்கள் நிறைந்த காடு. இடையில் ஒரு குறுக்கு வழியும் தென்படவில்லை. கவனமாக பார்த்துக் கொண்டே வந்த அகிலன் திடீரென ஓரிடத்தில் பிரேக் போட்டு பைக்கை நிறுத்தினான்.


அகரம்

விளம்பரத் தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11


“மச்சான் என்னடா..?” என்றான் ரஞ்சித்.

“டேய்.. அவடத்த பாரன்.. அதால காட்டுக்குள்ள போகலாம்..” என்று சொல்லியபடி பைக்கிலிருந்து இறங்கினான். இறங்கி போய் பார்த்தவன்

“டேய் ரஞ்சித்.. இங்க பார்..” என்று நண்பனை அழைத்தான்.

ரஞ்சித் வரவும்

“இஞ்ச பார்.. இதால பைக் போயிருக்கு.. மணல்ல டயர் அடையாளம் இருக்கு பார்..” என்று கைபேசியில் டோர்ச்லைட் அடித்து காட்டினான் அகிலன்.

“இவடத்த நிண்டு மினக்கட ஏலா.. வா போவம்..” என்று சொல்லிக் கொண்டு பைக்கை திருப்பினான் அகிலன்.

“மச்சான் இந்த காட்ட பாக்கவே பயமா கிடக்கடா.. எதுக்கும் யோசிடா ஒருக்கா.. இல்லாட்டி பொலிஸ்க்கு கோல் பண்ணுவம்..” என்றான் ரஞ்சித்.

“பொலிஸ்க்கு கோல் பண்ணி என்னடா சொல்லுற.. நமக்கே கன்போமா தெரியாது.. அதோட நீதானே சும்மா இருந்த என்ன இதுக்குள்ள இழுத்த.. வந்திட்டம்.. இனி முடிவு காணாம போக ஏலா.. ஏறுடா..” என்று சொல்லி நண்பனை ஏற்றிக் கொண்டு காட்டுக்குள் போகும் அந்தச் சிறிய ஒற்றைப் பாதைக்குள் பைக்கை முறுக்கினான் அகிலன்.

அந்த கும்மிருட்டைக் கிழித்துக் கொண்டு காட்டுப் பாதைக்குள் பாய்ந்தது அகிலனின் பைக்.

**தொடரும்...**

**தேவன்**

# கஜேந்திரகுமாரும் கருக்குமட்டையும்..!

இக்கட்டுரை எழுதப்படுவதற்கு சரியாக ஓர் கிழமைக்கு முன்பதாக, பிரித்தானியாவில் நடைபெற்ற சந்திப்பொன்றில், தாயகத்திலிருந்து வந்து கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.கஜேந்திரகுமார் அவர்களிடம், அங்கு கலந்து கொண்டிருந்த நபரொருவரால் கேட்கப்பட்ட கேள்வியும், அக்கேள்விக்கு கஜேந்திரகுமார் அவர்கள் உரைத்த பதிலும் சற்றே பரபரப்பைக் கிளறிவிட்டிருந்தது. மூர்க்கனும், முதலையும் கொண்டது விடாது என்பது போல, கஜேந்திரகுமாரின் வாயால் எதையாவது பிடுங்கியே ஆகவேண்டும் என்ற விதத்தில் குறித்த நபர் கேட்ட கேள்விக்கான பின்னணி என்ன? என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவிலும், பிரித்தானியாவிலும் 'ஈழத்தின்' பெயரால் இயங்கி வந்த ஏராளமான அமைப்புகள் மற்றும் குழுக்கள், 2009 இற்குப் பின்னர் தடம்புரண்டு, தறிகெட்டு ஓடத்தொடங்கின. அவற்றுள் முதன்மையானவையாக **BTF** எனப்படும், பிரித்தானியத் தமிழர் பேரவை, **GTF** எனப்படும் உலகத்தமிழர் பேரவை ஆகியனவற்றைக் குறிப்பிடமுடியும்.

தடம்புரளுதல் என்ற சொற்பதத்தை இங்கே குறிப்பிட வேண்டி ஏற்பட்டதன் அவசியத்தை விளக்கி விடுகிறேன். 2008 ஆம் ஆண்டு அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு மணிவண்ணன் அவர்கள், தாயகத்திலிருந்து வெளியிட்ட காணொளியில் ஓர் விடயத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருந்தார். விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு, மேற்குலகிலுள்ள மெத்தப் படித்த மேதாவிகள் சிலருக்கு ஊடகவெளிச்சம் கொடுத்து, அவர்களே தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என உருவேற்றி, ஈழத்தமிழரை மேற்குலகிடம் மண்டியிடச் செய்யும் திட்டத்தை வல்லரசு நாடுகள் மேற்கொள்ளுகின்றன என்ற செய்தியே அது. அவர் கூறியதற்கொப்பவே 2009 இற்குப் பிறகு பல அமைப்புகளிலிருந்த மெத்தப் படித்த மேதாவிகள் ஈழத்தமிழரை அடகு வைக்கும் காரியங்களில் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

இவற்றுள் மிக ஆபத்தானதும், இனத்தையே இல்லாதொழிக்கக் கூடியதுமான செயல் யாதெனில், அமெரிக்க மற்றும் பிரித்தானிய அரசின் திட்டங்களுக்கு ஏற்ப வளைந்து, நெளிந்து பூகோள அமைவிடத்தில் தமிழீழத்தினை பகடைக் காயாக்கும் செயலுக்குத் துணை போவதேயாகும். இந்த நூற்றாண்டில் இந்திய மற்றும் சீன முட்டுப்பாடுகளுக்கு நடுவில் நின்றபடி, எம்மைத் தக்கவைத்து கொள்ளும் நடைமுறையே



தற்போது அவசியமானது. அதேவேளை அமெரிக்க மற்றும் பிரித்தானிய அரசுகள் இணைந்து நிகழ்த்திய தமிழினப் படுகொலையையும், அதற்குத் துணை போன இந்தியாவின் கொடுங்கோன்மையையும் மறந்துவிட்டு, அவர்களது தேவைகளுக்கேற்ப வளைந்து கொடுக்கும் நகர்வுகளையே பிரித்தானியாவில் நிலைகொண்டிருக்கும் பல அமைப்புகள் செய்து வருகின்றன.

இந்நிலையில் அண்மைக் காலமாக, இந்தியாவின் அடிவருடிகளாக மாறிய சில ஈழத்தமிழர்கள், இந்தியாவின் பூகோள நலன்களுக்கு ஏற்ற வகையில், எமது மண்ணை இந்தியாவின் இன்னொரு மாநிலமாக மாற்றும் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கி வருகிறார்கள். இதில் ***BTF*** என்ற அமைப்பு, அதி தீவிர இந்திய விசுவாச அமைப்பாக மாறி நிற்கிறது. இந்திய இராணுவம் ஈழத்தில் நடாத்திய படுகொலைகளை மறைத்து, பிரித்தானிய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும், இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட அமைச்சர்களை அணுகி, அவர்களூடாக ஈழத்தமிழர் முகத்தில் கரிபூசும் வேலையை இவர்கள் செய்து வருகிறார்கள். இதற்கு இன்னொரு படிமேலாக; இந்தியாவிலேயே தங்கியிருந்து, இந்தியாவை வருடிவிடும் வேலையைச் செய்து வருகின்ற ஈழத்தமிழர்களும் உள்ளனர். மறுபுறத்தே யாழ்ப்பாணத்தில் காந்தி ஜெயந்தி விழா, காந்தி சிலை திறப்பு விழா, இந்தி மொழி கற்பித்தல், கண்ட இடத்தில் சிவலிங்கங்களை வைத்துவிட்டு, தானாய்த் தோன்றிய லிங்கம் எனக் கதைப்பரப்பும் இந்துவெறி நிரம்பிய அமைப்புகள் எனப் பல்வேறு வடிவங்களில் இந்தியா, தமிழீழத்தில் அகலக்கால் பரப்பியிருக்கிறது.

இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, பிரித்தானியாவில் நடந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்ட திரு. கஜேந்திரகுமாரிடம், ***BTF*** அமைப்பைச் சேர்ந்தவர் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவர் எழுப்பிய கேள்வி அமைந்திருந்தது. கடந்த *13* வருடங்களாக நாம் ஏன் சர்வதேசத்தை அணுகவில்லை? என்பதே அவர் எழுப்பிய கேள்வியாகும்.

அவரது சர்வதேசம் என்பது, இந்தியா என அவரது கேள்வியில் தெளிவாகப் புலப்பட்டது. ஆதலால்; அவரது கேள்வியின்




அடிப்படையைப் புரிந்துகொண்ட கஜேந்திரகுமார் அவர்கள்; 'நீர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்' என வெளிப்படையாக வினவினார். இக்கேள்வியைச் சற்றும் எதிர்பார்த்திராத அந்நபர்; நாக்குழறி, இறுதியில் அவர் அங்கம் வகிக்கும் அமைப்பை வெளிப்படையாகச் சொல்ல வேண்டியதாயிற்று. ஏற்கனவே மக்கிப்போன 13 ஆம் திருத்தச் சட்டத்தை, மீண்டும் அங்கீகரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் வலியுறுத்தலை, மறுத்து நிற்கும் ஈழத்தமிழர்களின் நியாயப்பாடு பற்றி கஜேந்திரகுமார் விளக்க ஆரம்பித்த வேளையில், கேள்வி எழுப்பிய நபர் கஜேந்திரகுமார் அவர்களது பதிலை இடைமறிக்க ஆரம்பித்தார்.

எவ்வித அங்கீகாரமும் தமிழர்களுக்குக் கிடைக்காத 13 ஆம் சட்டத் திருத்தம் பற்றி, கஜேந்திரகுமார் அவர்கள் வறுத்தெடுக்க ஆரம்பித்தார். தங்களது எண்ணம் நிறைவேறாத நிலையில், கேள்வி எழுப்பியவர்கள் அமைதியாக அமர்ந்து கொண்டனர். இந்நிலையில் கூட்டம் நிறைவு பெற்ற கணம் தொடக்கம், கஜேந்திரகுமார் மீது அவதூறுகள் பல்வேறு விதங்களில், பல செய்தித்தளங்கள் ஊடாக வீசப்பட்டன. கேள்வி எழுப்பியவரை நோக்கி, 'நீ எந்த அமைப்பு?' என கஜேந்திரகுமார் வினவியத்தில் தவறேதும் இல்லை. ஏனெனில் இங்கே இருக்கும் அமைப்புகள் பல இனப்படுகொலை நிகழ்த்திய நாடுகளுக்குத் துணைபோகும் அமைப்புகளே!. அவ்வாறான அமைப்புகளில் அங்கம் வகித்தபடி, புலம்பெயர்ந்து வாழும் நபர்கள் யாரும் ஈழத்தமிழர் விரும்பாத அல்லது ஈழத்தமிழரால் மறுக்கப்படும் எவ்வித முன்மொழிவுகளையும் திணிக்க முற்படுவது மிகத் தவறானது என்பதே கஜேந்திரகுமாரின் ஆணித்தரமான விளக்கமாக அமைந்தது.

பனைமட்டையின் வாள் போன்ற பகுதியை, மனிதர்களின் உடலில் படத்தக்கவாறு விசுக்கினால் எவ்வாறு வலிக்குமோ? அவ்வாறிருந்தது கஜேந்திரகுமார் அவர்களின் பதிலடி. இது தற்காலத்தில் மிகவும் அவசியமானது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.




25 ஆம் ஆண்டில்




Kings
Niru
LEELA
Suryaa
LION
Maliban
Double Horse
Tilda

# IMPORTAS

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்

Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38, Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

TRS
Aachi
Maggi
PG tips
Rubicon
ELAKKIA
OKF



பூமிபுத்திரன்

# மக்ரானின் சீன வருகை விளைவு என்ன?

உக்ரைன் மோதல் தணிவதற்கான எந்தவொரு அறிகுறியும் கண்ணுக்குத் தெரியவில்லை. மாறாக அது மென்மேலும் உக்கிரம் அடைவதற்கான சாத்தியங்களே தென்படுகின்றன. ரஸ்யப் படைகளின் முன்னேற்றம் மிகவும் மந்தநிலையில் இருப்பது ஒருபுறம் இருக்க உக்ரைன் தரப்பிலும் எதுவித முன்னேற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை. ஒரு முனையில் ரஸ்யா மாத்திரம் தனியாக நிற்கிறது. மறுபுறம் உக்ரைன் தரப்பில் மேற்குலகம் முழுவதுமாகத் திரண்டு நின்று ஆதரவு வழங்குகிறது.

ஆயுத தளபாடங்கள் வழங்குவது ஒருபுறம் இருக்க ஆயுதப் பயிற்சி, உளவுத் தகவல் பரிமாற்றம், செய்மதித் தகவல் பரிமாற்றம், தாக்குதல் இலக்குகளை அடையாளப்படுத்துதல், பரப்புரைப் போர்என மேற்குலகின் ஆதரவு பலமாக இருந்தும் உக்ரைன் தரப்பினால் போர்க்களத்தில் பாரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்த முடியவில்லை. தற்போது உக்ரைனின் உத்தேச எதிர்த் தாக்குதல் தொடர்பில் பெரிதும் பேசப்படுகின்றது. அது எந்தளவில் வெற்றியளிக்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இத்தகைய பின்னணியில் பிரான்ஸ் அதிபர்இம்மானுவேல் மக்ரோனின் சீன விஜயம் கவனத்தைப் பெறுகின்றது. ஓய்வு+திய வயதை 62இலிருந்து 64ஆக உயர்த்தும் சட்டத்துக்கு எதிராக இலட்சக்கணக்கான பிரான்ஸ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாடு தொடர்ச்சியாகப் பற்றியெரியும் நிலையில் அதனைக் கவனிப்பதை விட்டுவிட்டு உலக அமைதி(?) வேண்டி மக்ரோன் சீனா சென்றுள்ளார்என நினைக்கையில் அவரின் கடமை உணர்ச்சி(?)யைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. மூன்று நாள் விஜயமாக சீனா சென்ற மக்ரோன் தன்னோடு ஐம்பதுக்கும் மேற்பட்ட முக்கிய தொழிலதிபர்களையும் அழைத்துச் சென்றிருந்தார்.

சீன அதிபர்ஸி ஜின்பிங்கைச் சந்தித்து உரையாடிய மக்ரோன், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர அவரின் உதவியைக் கோரி இருக்கிறார். உக்ரைன் போர்விடயத்தில் மேற்குலகின் பக்கம் சார்ந்து ரஸ்யாவைக்

கண்டிப்பதில் இருந்து விலகியிருக்கும் சீனா அண்மையில் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்து இருந்தது. அந்தத் தீர்வுத் திட்டத்தை உடனடியாகவே அமெரிக்கா நிராகரித்து இருந்தது. போரில் உக்ரைன் தொடர்ந்தும் ஈடுபடக் காரணமாக இருப்பவை பிரான்ஸ் உள்ளிட்ட மேற்குலகினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவரும் ஆயுதங்களே. சீனாவின் தீர்வுத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது, ஆயுதங்கள் வழங்குவதையும் நிறுத்த முடியாது எனும்போது போரை நிறுத்துவது எங்ஙனம்? தங்கள் தரப்பிலிருந்து எந்தவொரு முன்முயற்சியையும் செய்யாது சீனாவிடம் போய்க் கோரிக்கை வைப்பதால் என்ன நடந்துவிடும்? எதுவுமே நடக்காது எனத் தெரிந்துகொண்டும் சீனா சென்று கோரிக்கை வைப்பதன் நோக்கம் என்ன?

உக்ரைன் மோதல் ஆரம்பித்த நாள்முதலாக மேற்குலகுடன் இணைந்து ரஸ்யாவைக் கண்டிக்க மறுத்துவரும் நாடுகளுள் ஒன்று சீனா. சீன அதிபர்ஸீ அண்மையில் ரஸ்யாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு அதிபர்புட்டினோடு பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அது மாத்திரமன்றி, புட்டினை சீனாவுக்கு வருகை தருமாறு வேண்டுகோளையும் வைத்திருந்தார். உக்ரைன் மோதலைத் தொடர்ந்து உலக அரங்கிலிருந்து ரஸ்யாவை ராஜதந்திர அடிப்படையில் தனிமைப்படுத்த நினைக்கும் அமெரிக்காவுக்கு இது பாரிய தலையிடியாக உள்ளது. அது மாத்திரமன்றி ரஸ்யாவுடன் படைத்துறை அடிப்படையிலான உறவுகளைப் பேணிவரும் சீனா, ரஸ்யாவுக்கு ஆயுத, தளபாட உதவிகளை வழங்கக்கூடும் என்ற சந்தேகங்களும் மேற்குலகத் தரப்பில் எழுந்துள்ள நிலையிலேயே மக்ரோனின் சீன வருகை நிகழ்ந்துள்ளது.

முடிந்தால் சீனாவோடு பேசிப் பணிய வைப்பது, முடியாவிட்டால் வெருட்டிப் பார்ப்பது இதுவே மக்ரோனின் வருகையின் இரகசியம்.

உக்ரைன் மோதல் தொடங்கிய வேளையிலேயே அது மூன்றாம் உலகப் போருக்கான ஆரம்பமாக அமையக் கூடும் என்ற எச்சரிக்கை பல்வேறு தரப்புகளிலும் இருந்தும் முன்வைக்கப்பட்டு இருந்ததை அறிவோம். நடப்பு நிகழ்வுகள் அந்த எச்சரிக்கையைச் சாத்தியப்படுத்துவதைப் போன்றே அமைந்துள்ளன. உக்ரைனை நேட்டோவில் இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத்



தடுக்கும் நோக்குடனேயே படை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ரஸ்யா தெரிவித்து வருகிறது. "ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதைப் போல இதுநாள்வரை நடுநிலை நாடாக விளங்கிய ரஸ்யாவின் அயல்நாடான பின்லாந்தை நேட்டோவில் இணைத்து ரஸ்யாவை மேலும் கடுப்பேற்றியிருக்கிறது அமெரிக்கா. மற்றொரு அயல்நாடான ஜோர்ஜியாவில் அரசியல் குழப்பங்களை உருவாக்கி, அந்த நாட்டையும் நேட்டோவில் இணைத்துக்கொள்ள கங்கணம் கட்டி நிற்கிறது அமெரிக்கா.

பதிலுக்கு, தனது நட்பு நாடான பெலாரஸ்சுக்கு அணுவாயுதங்களை நகர்த்த ரஸ்யா முடிவு செய்துள்ளது. ஏற்கனவே, கிரீமிய தீபகற்பத்தைக் கைப்பற்ற உக்ரைன் முயன்றால் அணுவாயுதங்களைப் பயன்படுத்த நேரிடும் என்ற எச்சரிக்கையை ரஸ்யா விடுத்துள்ளது. இந்நிலையில் அமெரிக்கா எதிர்பார்ப்பதைப் போன்று ரஸ்யாவுக்கு படைத்துறை அடிப்படையில் சீனா உதவ முன்வருமானால் விளைவுகள் விபரீதமாகவே அமையும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

தாய்வான் விடயத்தில் அமெரிக்கா கடைப்பிடித்துவரும் அணுகுமுறை காரணமாக ஆத்திரத்தின் உச்சத்தில் இருக்கும் சீனா தனது நிதானத்தை இழக்குமானால் உலகம் எத்தகைய விளைவைச் சந்திக்கக் கூடும் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாக உள்ளது.

இந்நிலையில், சீன-தாய்வான் விவகாரத்தில் அமெரிக்கா கடைப்பிடித்துவரும் அணுகுமுறையைக் கண்ணைமூடிக் கொண்டு ஆதரிக்க முடியாது என மக்ரோன் தெரிவித்துள்ளார். அமெரிக்க மேலாண்மைக்கு எதிராக அவர்இவ்வாறு பேசுவது முதன்முறையல்ல. ஏற்கனவே பல தடவைகளில் அவர்உட்பட பல ஐரோப்பியத் தலைவர்கள் பேசியுள்ளார்கள். ஆனால், மக்ரோன் உட்பட அவர்கள் அனைவருமே இறுதியில் அமெரிக்க மேலாண்மையிடம் பணிந்தே போயிருக்கிறார்கள் என்பதே வரலாறு. உலக அமைதிக்குக் குந்தமாக அமெரிக்க மேலாண்மையே உள்ளது எனத் தெரிந்திருந்தும், அதற்குப் பணிந்து போவது என்பது நவீன வகை அடிமைத்தனமே அன்றி வேறில்லை.




# TR Bati

**Professionnel, Fiable, Pile l´heure**

நிபுணத்துவம், நம்பகத்தன்மை, குறித்த நேரத்தில்
அனைத்து வீட்டுவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.



**+33 6 52 46 48 59**
**+33 6 52 60 29 06**

**1 Allée Pierre de Ronsard**
**77200 Torcy**
**France**

contact@
www.trbati.fr
trbatikandiah@gmail.com

- Rénovation — சீரமைப்பு
- Plomberie — தண்ணீர் குழாய் இணைப்பு
- Électricité — மின்சார வேலை
- Charpenterie — தச்சு வேலை
- Carrelage — மார்பிள் பதித்தல்
- Parquet — பலகை பதித்தல்



சர்மிலா வினோதினி

# வெடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும்..





**வ**வுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக் கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. 'ஒலு' என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள், இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் 'ஒலுமடு' என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம். எளிமையும், இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப் பகுதியிலிருந்து வண்டியில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோ மீற்றர்கள் வனப் பகுதிக்குள் பயணப்படுகின்றபோது, இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு, திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப் போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும், அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும், கொடிகளும், செடிகளுமாக அந்த வனமும், இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

காட்டின் மணத்தை நுகர்ந்து கொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல, வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியைக் காணலாம். மலையின் முன்னும், பின்னுமாக ஒரு வகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது.

இந்தப் பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின்

முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்டு, அவ்வெழுத்துகள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துகளின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து, சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு வினாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்குச் சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள்.


உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட, மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால், மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில், நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தைப் பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது, மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஒரிடத்தில், மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பாரிய கல் ஒன்று சிறு, சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு, நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழில்நுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியைக் கடந்து மலையின் மேல் நோக்கிச் செல்லுகின்ற போது, ஒரேசீராகக் குடையப்பட்ட சிறியச் சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும், நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியைக் கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க, மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில், பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள், விளிம்புச் சதைகளைப் போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற்ச்சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும், தாங்கள் பிரசாதமாக படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும், பக்தர்களும்.

**தொடரும்...**




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

கல்லெறி வேலுப்பிள்ளை

# “என்ன கொடுமை சரவணா!”



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**என்ர பாடு ஏதோ போகுது பாருங்கோ. நீங்கள் எல்லாரும் நல்லா இருந்தால் நான் நல்லா இருந்த மாதிரித்தானே. ஆனால் நல்லா இருக்க விடாங்கள் பாருங்கோ. ஒவ்வொரு மனுசனும் பக்கத்தில இருக்கிறவனை கடிச்சுத் தின்னுற மாதிரி ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பங்கள் கண்டியளோ. மனிதன் தோன்றிய காலத்தில இருந்து இந்த நிலையில மாற்றம் இல்லை பாருங்கோ. அதாலதானே உலகில இவ்வளவு அழிவுகளும், கொடுமைகளும் நடக்குது கண்டியளோ.**

கடிச்சுத் தின்னுற எண்டால் ஏதோ வாயால கடிச்சுது தின்னுறது இல்லை கண்டியளோ. யாரவது பக்கத்தில இருக்கிறவன் நேர்மையா முன்னேறினாலோ அல்லது கொஞ்சம் வாழ்க்கையில தங்களை விட மேன்மையாக வாழ்ந்திட்டானோ எண்டால் எங்கடயளுக்கு பொறுக்காது. எப்படியாவது அவனை விழுத்திப்போடவேணும் எண்டு குறியா அலைஞ்சு அவனை இல்லாமல் செய்யும் வரைக்கும் ஓயாதுகள் பாருங்கோ. என்ன இந்தாள் கனக்க சுத்தி வளைச்சு கதைக்கிறன் எண்டு யோசிக்கிறியளே. நான் நேராவே விசயத்துக்கு வாறன் பாருங்கோ.

விசயம் என்னவெண்டா பாருங்கோ; ஊரில இருக்கிற உறவுகளுக்கு உதவுறம் எண்ட பெயரில எங்கட ஆக்கள் வெளிநாடுகளில இருந்து ஏராளமான நிதி உதவிகளைச் செய்யுறவை தானே. அதேமாதிரி அமைப்புகள் ஊடாகவும் பணம் அனுப்பி உதவுறவை எண்டு இஞ்ச எல்லாருக்கும் தெரியும். அப்பிடி ஊருக்கு உதவுறம் எண்டு வெளிக்கிட்ட சிலர் அதை வியாபாரமாகச் செய்யினம் எண்டது பலருக்கு தெரியாம இருக்கலாம் பாருங்கோ. வியாபாரம் எண்டால் இஞ்ச வாங்கி அங்க விக்கிறது இல்லை பாருங்கோ.

நாங்கள் அங்க உங்கட பெயரில செய்யும் எண்டு சொல்லி இஞ்ச காசை வாங்கி, அதில கொஞ்சத்தை மடக்கிப்போட்டு, மிச்சத்தை ஊருக்கு அனுப்பி, சனத்தைக் கையேந்த வைச்சு நாலைஞ்சு படத்தைப் போட்டு, அதுக்கு ஆறடி நீளத்தில கதை வசனம் எழுதி, எல்லாருக்கும் அனுப்பி, தங்களை ஒரு மாபெரும் கொடைவள்ளலாக காட்டுற ஆக்களைத் தான் நான் சொல்லுறன் பாருங்கோ. ஆனால் அதுக்காக எல்லாரும் அப்படி இல்லை பாருங்கோ. கிடைக்கும் முழுப்பணத்தையும் நேர்மையாக ஊருக்கு அனுப்பி எங்கட சனத்தை வாழவைக்குற ஆக்களும் இருக்கினம் பாருங்கோ.

இப்பிடித்தான் கண்டியளோ; எனக்குத் தெரிஞ்ச நண்பர் ஒருத்தர், அவருக்குத் தெரிஞ்ச ஒருவரூடாக ஊருக்கு காசு அனுப்பி உதவி செய்யப்போறம் எண்டு வெளிக்கிட்டார். என்னையும் அதில பங்கெடுக்கச் சொல்லிக்கேட்டார். நானும் ஓமெண்டு சொல்லி, என்ன செய்யப்போறம் எண்டு கேட்டன். வீடில்லாமல் இருக்கிற ஓர் குடும்பத்துக்கு வீடு கட்டிகுடுப்பம் எண்டு என்னுடைய நண்பர் சொன்னார். சரியெண்டு ஏதோ என்னால முடிஞ்ச தொகையை நானும் குடுத்தன் கண்டியளோ.

அதே நேரத்தில, நாங்கள் பணம் குடுக்க இருந்த நபரூடாக காசு குடுக்க வேண்டாம் எண்டும், தங்களட்டத் தந்தால் அதைவிடச் சிறப்பாகச் செய்வம் எண்டு இன்னொரு அமைப்பைச் சேர்ந்த ஒருத்தர் சொன்னாராம். அதைவிடச் சிறப்பா எண்டால் எப்பிடி, வீட்டுக்குத் தங்கத்தில கூரை செய்து போடுவினமோ எண்டு நான் கெட்டுப் போட்டன் பாருங்கோ. என்ர வாய் சும்மா கிடவாதுதானே. நான் உப்பிடிக் கெட்டுப் போட்டன் எண்ட உடன, இந்த புது அமைப்புக்காரருக்கு என்னிலையும் நண்பரிலையும் கடுமையான கோபம் பாருங்கோ.

சரி, நீங்கள் ஊரில குடுத்து உதைச் செய்துபாருங்கோவன், அப்ப உங்களுக்கு நாங்கள் செய்யுறதின்ர வித்தியாசம் தெரியும் எண்டு சொன்னார் அந்த புது அமைப்புக்காரர். நாங்கள் அவரின்ர கதையை பெரிசா கவனத்தில எடுக்கேல்லை கண்டியளோ. நாங்கள் செய்யுற உதவி நேர்மையாக அந்தச் சனத்துக்கு போனா காணும் எண்டது மட்டும்தான் எங்கட தேவை. அதனால நாங்கள் ஏற்கனவே கதைச்ச அமைப்புக்காரிட்ட காசைக் குடுத்து அவையையே வீடு கட்டிக்குடுக்கிற வேலையைப் பார்க்கச் சொல்லிப்போட்டம் கண்டியளோ. சரியெண்டு அங்க நாங்கள் வீடு எல்லாம் கட்டிக்குடுக்கிற அலுவலை தொடங்கீட்டம் பாருங்கோ.

இதேநேரத்தில, குழப்ப வந்த புதுமைப்பின்ர தலைமைப்பொறுப்பில இருக்கிறவர் ஊருக்கு போயிருக்கிறார் பாருங்கோ. அவர் ஊருக்குப் போறதும் வாறதும் அவரின்ர விருப்பம் கண்டியளோ. ஊருக்குப் போனவருக்கு நாங்கள் எங்க வீடு கட்டுறம், எப்பிடி கட்டுறம், யாரை வைச்சுக் கட்டிக்குடுக்கிறம் எண்டு பாக்கோணும் எண்டதுக்காக, ஏதோ மாதிரி முகவரியைத் தேடிக்கண்டுபிடிச்சு அந்த இடத்துக்குப் போயிருக்கிறார் கண்டியளோ. அங்க போகப்போறது பற்றி எனக்கோ அல்லது என்னுடைய நண்பருக்கோ சொல்லேல்லை கண்டியளோ. அங்க போய், அந்த வீட்டை கட்டிக்குடுக்கிற வேலையாட்களிட்ட விபரங்கள் கேட்டது மட்டுமில்லாமல், இந்த வீட்டுக்குரிய குடும்பம் எங்க இருக்கினம் எண்டும் முகவரியை வாங்கிப்போட்டார். இதொண்டும் உங்களுக்குத் தெரியாது பாருங்கோ.

முகவரியை வாங்கினவர் நேர அந்தக் குடும்பம் இப்ப இருக்கிற இடத்துக்கு போய், வீடு கட்டிக்கொடுக்கிற அமைப்பை பற்றியும், அதற்குரிய செலவெல்லாம் கொஞ்சம் அதிகம் எண்டுறதுபோலவும் அடிச்சு விட்டிருக்கிறார் கண்டியளோ. இதெல்லாம் ஒரு பக்கம் ஓடிக்கொண்டிருக்க இவர் தன்னுடைய அமைப்பின்ர தாயகக் கிளையின்ர ஆண்டு நிறைவை கொண்டாடுறதுக்கான ஏற்பாடுகளையும் செய்துபோட்டுத்தான் ஊருக்குப் போயிருக்கிறார் கண்டியளோ.

அங்க போய் ஆண்டுவிழாவுக்கான அழைப்பிதழ் கொடுக்கும்போது சிறிலங்கா காவல்துறை அதிகாரிக்கும் அழைப்பு விடுத்து அவரை சிறப்பு விருந்தினராக விழாவுக்கு நிகழ்வுக்கு




19 ஆம் ஆண்டில்....

Radio - by - Phone

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

00 49 231 700 977 60

மேலதிக விபரங்களுக்கு... www.etr.fm

மகிழ்வுடன்....

அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

அழைத்திருக்கிறார். ஈழத்தமிழரை அழிச்ச அரசாங்கத்தின்ர காவல்துறையில வேலைபாக்குற ஒருத்தரை, ஈழத்தமிழருக்கு உதவுற அமைப்பின்ர ஆண்டு விழாவுக்கு ஏன் அழைக்கவேணும் எண்டது கூடத் தெரியாமல் இவரெல்லாம் எப்பிடி தமிழராக இருக்கமுடியும்.?

சரி அதை விடுங்கோ; விழா முடிஞ்ச மறுநாள், இவர் நாங்கள் உதவி செய்யுற குடும்பத்திட்ட போய், எங்கட தொடர்புகளை தவிர்க்கச் சொல்லியும், சிறிலங்கா அரசு உதவியோட அவரே ஒரு சிறப்பான வீட்டைக் கட்டித்தாறதாகவும் சொல்ல, அந்தக்குடும்பமும் அதை நம்பி எங்களோட இருந்த தொடர்பைத் துண்டிச்சுப்போட்டினம். ஆனால் நாங்கள் குடுத்த காசில வீடு அரைவாசி வேலை முடிஞ்சுது கண்டியளோ. மிச்ச வேலைக்கு காசு குடுக்க போன நாங்கள் பணம் கொடுத்த அமைப்பின் உறுப்பினரை வாசலோடையே வீட்டுக்காரர் திருப்பிவிட்டிட்டினமாம்.

இதென்னடா புதுக்குழப்பமாக் கிடக்கெண்டு திரும்பி வந்த உறுப்பினர், விடயத்தை என்னுடைய நண்பருக்கு சொல்ல, அவரும் இனி அங்க போகவேண்டாம் எண்டு சொல்லிப் போட்டார் பாருங்கோ. போன காசு போகட்டும், நாங்கள் கட்டித்தாறது அவைக்குப் பிடிக்கேல்லை எண்டா இனி என்ன செய்யுறது எண்டு நாங்களும் விட்டுட்டம். இதெல்லாம் முடிஞ்சு ஒரு ஆறுமாசம் இருக்கும் பாருங்கோ, நாங்கள் கட்டி இடை நடுவில் நிப்பாட்டப் பட்ட வீடு தங்களால் கட்டப்பட்டதாக, குழப்ப அமைப்பின்ர தலைவர் செய்திபரப்புறார் பாருங்கோ. இதென்னடா புதுக்கொடுமையா இருக்கெண்டு விசாரிச்சால், நாங்கள் கட்டி அரைவாசியில் விலகிய வீட்டை, அவர் எடுத்து மீதி வேலையை முடிச்சுப்போட்டு, முழுவீட்டையும் அவரே கட்டிக்கொடுத்த மாதிரி ஒரு தொகையை போட்டு, அதுக்கொரு பற்றுச்சீட்டையும் எழுதி, தன்ர அமைப்பில காட்டி நல்ல தொகையும் எடுத்திட்டார் கண்டியளோ

இதை இனி நாங்கள் எங்க போய் கதைக்கிறது சொல்லுங்கோ பாப்பம். நாங்கள் கட்டிக்கொடுத்த வீட்டை இவன் ஆட்டயப் போட்டுட்டான் எண்டு சொல்லுறதா ? அல்லது, இவன் எங்கட காசை கொள்ளையடிச்சு அதில வருமானம் பார்த்திட்டான் எண்டு சொல்லுறதா ? அல்லது இவன் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தை துணையாக வைச்சுக் கொண்டு, ஊரில மிரட்டி வேலை பாக்குறான் எண்டு சொல்லுறதா ? ஒண்டுமா விளங்கேல்லை கண்டியளோ. ஊரில இருக்கிற சில எங்கட சனமும் அங்கிடுதத்தியள் மாதிரி பாஞ்சு பாஞ்சு ஓடுறது. ஒரு இடத்தில நிலையா நிக்குறதில்லை கண்டியளோ.

ஏதோ முடிஞ்சவரைக்கும் உதவும், முடியாட்டி ஆரட்டையும் கேட்டாவது உதவும் பாருங்கோ.

*படைத்தவன்மேல் பழியுமில்லை*
*பசித்தவன்மேல் பாவமில்லை*
*கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்*
*உழைத்தவர்கள் தெருவில் நின்றார்*
*பலர் வாட வாட சிலர் வாழ வாழ*
*ஒருபோதும் தெய்வம் பொறுத்ததில்லை!*

**அப்ப வரட்டே**







Rheinische Str.29-44137-Dortmund

0231 58 96 557 | 0231 55 74 319

www.centurytravels.de info@centurytravels.de



வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648